JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 12 | இதழ்: 6 | ஆகஸ்ட் 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-





## யெகோவா எலியோன்

அவருக்கு முன்பாக எல்லா முழங்கால்கள் முடங்கும்,
அவரே உன்னதமான தேவன் (யெகோவா எலியோன்)

4 திருப்புமுனை
10 குற்றவுணர்வு
16 மௌனயுத்தம்
22 வெட்கப்படேன்
32 யோபு


வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள்

**சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!**

Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" **என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.**

## சந்தா விவரம்

**ஆண்டுக்கு ₹100/-**
**3 ஆண்டுக்கு ₹200/-**
**ஆயுள் சந்தா ₹1,000/-**

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353535
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா



*அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!*

அந்த நாட்களில் இரு நாடுகள் நடுவே யுத்தம் மீளும் போது, எதிரியின் நாட்டை ஜெயித்து சூறையாடி, அவர்கள் மிகவும் போற்றத்தக்க பொருள்களையும், உடைமைகளையும் கொண்டு போய் விடுவார்கள். அன்றைக்கும் அப்படி தான் பெலிஸ்தர்கள், இஸ்ரவேல் தேசத்தை ஜெயித்து, இஸ்ரவேலர்கள் மிகவும் போற்றத்தக்க, மதிக்கத்தக்க, கனப்படுத்தும் முக்கியமான ஒன்றான ''தேவனுடையப் பெட்டியை'' கொண்டு போய் தாகோன் கோவிலில் வைத்து விட்டார்கள்.



இஸ்ரவேலுக்கு மணிமகுடமாய் திகழ்ந்த தேவனுடையப் பெட்டி, அவர்களின் அலட்சியத்தால் பிடிப்பட்டது. என்றைக்கு தேவனுடையப் பெட்டி பெலிஸ்தியரால் பிடிபட்டதோ அன்றே இஸ்ரவேலின் மகிமை விலகிவிட்டது என்று இஸ்ரவேலர் புலம்பினார்கள். அப்பேர்ப்பட்ட புகழ்மிக்க தேவனுடையப் பெட்டியை கைப்பற்றி விட்டோம் என்ற பெருமிதத்தில் பெலிஸ்தியர்கள் மிதந்துக் கொண்டிருக்க, மறுநாள் காலையில் அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அவர்கள் வணங்கும் தாகோன் சிலை கர்த்தருடையப் பெட்டிக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து கிடந்தது. அதைப் பெலிஸ்தியர்கள் அதின் ஸ்தானத்தில் நிறுத்தினார்கள். மறுநாள் தாகோன் சிலை கர்த்தருடையப் பெட்டிக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து கிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடந்தது. தாகோனுக்கு உடல் மாத்திரம் மீதியாயிருந்தது.

கர்த்தருடையப் பெட்டியின் வல்லமையும், மகிமையும் அறியாத பெலிஸ்தியர்கள் அதிர்ந்து போனார்கள். கர்த்தர் யார்? அவருடைய மகிமை என்ன? என்று பெலிஸ்தியர்கள் அறிந்த பிறகு, பயபக்தியோடு கர்த்தருடையப் பெட்டியை இஸ்ரவேல் பாளயத்திற்கு திரும்ப அனுப்பி விட்டார்கள்.



அவருக்கு முன்பாக எல்லா முழங்கால்கள் முடங்கும், எல்லா நாவுகள் அறிக்கையிடும் அப்படியிருக்க தாகோன் சிலை எம்மாத்திரம். அவர் பராக்கிரமம் நிறைந்தவர். அவரே உன்னதமான கர்த்தர். அநேக நேரம் நாம் ஆராதிக்கும் தேவனின் வல்லமையை நாம் அறியாமல் இருக்கிறோம், அநேக நேரம் அவருடைய வல்லமையை அறிந்து, அனுபவிக்க ஆசையும் இல்லாமல் இருக்கிறோம்.

முதலில் நாம் அறிந்துக் கொண்டு பின்னர் அறியாத ஜனத்திற்கு அறிவிப்பது நம் கடமை. இருண்ட அவர்கள் கண்களுக்கு ஒளி கொடுக்க, கர்த்தருடைய உன்னத தன்மையை அவர்கள் விளங்கிக் கொள்ள, அதை அறிவிப்பது நமது பொறுப்பல்லவா?

**தேவனுடைய நாமத்தை அறிவிப்பதில் இன்னும் ஏன் தாமதமும், நிர்விசாரமும்.**

வாலிபனே! நீ ஆராதிக்கும் தேவன் யெகோவா எலியோன் (உன்னதமான கர்த்தர்) வல்லமையானக் காரியங்களைச் செய்கிறவர் என்பதை **பகிர வேண்டியது நீ தான்!** இப்படிப்பட்ட ஒரு தெய்வம் உனக்கும் உண்டு, கலங்க வேண்டாம்! என்று ஜனங்களை பெலப்படுத்த வேண்டியவன் **நீ என்பதை மறந்து போகாதே!**

கிறிஸ்துவின் பணியில்
*அவினாஷ்*

சாட்சி: ஜிஷ்யா

# திருப்புமுனை...

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, ஆண்டவரை அறிந்திருந்தும் தனது இளம் வாலிப வயதில் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டுமென்று ஆண்டவரை விட்டு வழிவிலகிப் போன ஜனி லோவிசாள் வாழ்க்கையில் ஆண்டவர் எப்படி ஒரு திருப்பத்தைக் கொண்டுவந்தார் என்பதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**





*சகோதரி ஜனி லோவிசாள் தன் குடும்பத்துடன்*

### உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

நான் தூத்துக்குடி மாவட்டம் புதுக் கோட்டையில் வசிக்கிறேன். என் பெற்றோர்கள் இருவரும் அரசு ஊழியர்களாக இருக்கிறார்கள். எனக்கு ஒரு மூத்த சகோதரன் இருக்கிறார். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த நான், சிறு வயதில் ஆலயத்திற்கும், ஞாயிறு பள்ளி வகுப்புகளுக்குச் சென்றாலும் கர்த்தருக்கும் எனக்குமுள்ளத் தொடர்பு தூரமாகவே இருந்தது. அனுதினமும் வேத வாசிப்பு என்னிடத்தில் காணப்பட்டாலும் இரட்சிப்பின் அனுபவம் எனக்கு இல்லை. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததால் பெற்றோரின் கண்டிப்புக்காக மட்டுமே வேதம் வாசிப்பேன். கர்த்தரைப் பற்றி அறிந்திருந்தும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை அறியவில்லை. சினிமா பார்ப்பது, பொய் சொல்வது, திருடுவது மட்டுமே பாவம் என்று நினைத்திருந் தேன். பாவ மன்னிப்பின் நிச்சயம், இரட்சிப்பு, அபிஷேகம் போன்ற அனுபவங்கள் எனக்கு இல்லை. பெயர் அளவில் மட்டுமே கிறிஸ்தவளாக இருந்து வந்தேன்.

### உங்களுடைய பள்ளிப் படிப்பைப் பற்றி சொல்லுங்களேன்?



விக்டோரியா மேல் நிலைப் பள் ளியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்தேன். அங்குள்ள ஆசிரியர்களின் வழிகாட்டுதலால் என் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. கிறிஸ்தவப் பள்ளி என்பதால் இயேசுவைக் குறித்து அநேகக் காரியங்கள் கற்றுக் கொண்டேன். என் ஜெப வாழ்க்கை மாறத் தொடங்கியது. வேதம் வாசித்து, ஜெபித்து தான் பாடங் களைப் படிக்கத் துவங்குவேன். கர்த்தரின் கிருபையால் பள்ளிப் படிப்பை முடிக்க தேவன் உதவி செய்தார்.

**ஒகே... உங்கள் ஆசிரியரின் மூலம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றீர்கள்... அதன்பிறகு உங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது மாற்றம் உண்டானதா?**

நான் ஏழாம் வகுப்பு படிக்கும்போது, என்னுடைய தமிழ் ஆசிரியை இரட்சிப்பைக் குறித்தும், அபிஷேகத்தைக் குறித்தும், அந்நிய பாஷையைக் குறித்தும் அநேக காரியங்கள் கற்றுக் கொடுத்தார்கள். அப்பொழுது எனக்கும் அதைக் குறித்த தாகம் ஏற்பட்டது. தினமும் chapel-க்கு சென்று ஆசிரியையின் வழிகாட்டுதல்படி ஜெபிப்பேன். அப்பொழுது கர்த்தர் எனக்கு இரட்சிப்பின் அனுபவத்தையும் அபிஷேகத்தையும் கொடுத்தார். அவர்களின் வழிகாட்டுதல்படி என் வாழ்க்கை மாறியது. இரண்டு ஆண்டுகளில் என்னை இரட்சிப்புக்குள் நடத்திய ஆசிரியை மரித்துப் போனார். அதன்பின்பு, என் ஜெபம் எனது குடும்பத்திற்காகவும் படிப்பிற்காகவும் என குறுகியது.

நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, என்னுடைய பொது தேர்விற்காக ஜெபத்தோடு ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். **3rd Revision** தேர்வு வரைக்கும் 497/500 மதிப்பெண் எடுத்திருந்தேன். ஆனால் பொதுத்தேர்வில் நான் எதிர்பார்த்திருந்த மதிப்பெண் கிடைக்கவில்லை. இது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. பன்னிரெண்டாம் வகுப்பிற்காக, பதினொன்றாம் வகுப்பிலிருந்தே பொதுத் தேர்விக்கு ஆயத்தப்படத் தொடங்கினேன். பன்னிரெண்டாம் வகுப்புத் தொடங்கும்போதே அல்சர், டைபாய்டு நோயால் மிகவும் கஷ்டப்பட்டேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற எனக்கு படிப்பைத் தொடர்வது கடினமாக இருந்ததால், 12ம் வகுப்புப் பொதுத்தேர்விலும் நான் எதிர்பார்த்த மதிப்பெண் எடுக்க முடியவில்லை. கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்கவில்லை என்று இயேசுவின் மேலிருந்த விசுவாசம் குறைந்து, ஜெப வாழ்க்கையும் குறைய ஆரம்பித்தது. எனக்கும் கர்த்தருக்குமுள்ள தொடர்பு தூரமானது.

**சரி... கல்லூரிப் படிப்பை படித்தீர்களா? எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள், இரட்சிக்கப்பட்ட பின்பு உங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்...**

ஆம்... கலைக் கல்லூரியில் சேர்ந்து English Literature படிக்க தேவன் உதவி செய்தார். அப்போது எனக்கு மொபைல் போன் வாங்கிக் கொடுத்தார்கள். அதன் பிறகு எப்பொழுதும் நான் மொபைல் போனில் தான் என் நேரத்தை செலவிட ஆரம்பித்தேன். ஆனால் எல்லா கிறிஸ்தவ வாலிப கூட்டங்களுக்கு சென்று






வாலிபர் கூடுகையில் கலந்து கொண்டபோது...

வருவேன். எல்லா கூடுகையிலும் இயேசுவே எப்படியாகிலும் உங்களை நெருங்கி வரவேண்டுமென்று ஒப்புக்கொடுத்து வருவேன். ஆனால் வீட்டிற்கு வந்ததும் நீ எவ்வளவு ஜெபித்தாலும் எந்த ஒரு வெற்றியும் உனக்கு இல்லையே என்று சாத்தான் பேசுவான். திரும்பவும் என் பழைய நிலைக்கு சென்று விடுவேன். 2018ஆம் ஆண்டு ஒரு கூடுகையின் மூலம் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டு நடத்தி வந்தோம். அப்போது நீயே இன்னும் சரியாகவில்லை, எப்படி இந்த ஜெபக்குழு நடத்துகிறாய்? என்று எனக்குள் ஒரு கேள்வி எழுந்து கொண்டிருந்தது. நானும் பாவத்தை ஒப்புக்கொடுத்து ஜெபித்தும் என்னால் மேற்கொள்ள முடியவில்லை. இந்த சூழ்நிலையில் 2020 Lockdown-ல் ''ஜெபிக்கலாம் வாங்க'' நிகழ்ச்சி மூலமாக என்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து திரும்பவும் எனது இரட்சிப்பை புதுப்பித்துக் கொண்டேன். கர்த்தர் என்னை கரம் பிடிக்கவே என் வாழ்க்கை முற்றிலும் மாறியது. அடுத்த நாள் அதிகாலையில் 1½ மணி நேரம் தேசத்திற்காக ஜெபிக்க தேவன் பெலன் கொடுத்தார்.



ஜெபிக்கலாம் வாங்க

பின்பு ஜெப நேரம் 3-4 மணி நேரமாக அதிகரித்தது. 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜெபக்குழுவை திரும்ப ஆரம்பிக்க கர்த்தர் என்னோடு பேசினார். நான் அந்த ஜெபக்குழு மூலமாக அநேகக் காரியங்களை செய்வேன் என்று சொல்லி திரும்ப ஆரம்பித்து, தோழிகளுடன் இணைந்து புதன் கிழமை தோறும் எழுப்புதலுக்காகவும், வெள்ளிக்கிழமை தோறும் எங்கள் ஆலயத்திற்காகவும் ஜெபிக்க ஆரம்பித்தோம். ஜெபித்தால் மட்டும் போதாது சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமென்றும் பேசினார்.



ஜெபக்குழு

### ஒகே... சுவிசேஷம் அறிவிக்க ஆரம்பித்தீர்களா? இப்பொழுது உங்களுக்கும் கர்த்தருக்கும் உள்ள தொடர்பு எப்படி இருக்கிறது?

2021 ஜனவரி மாதம் நடைபெற்ற Igniters முகாமில் கலந்து கொள்ள தேவன் உதவி செய்தார். என்னை முற்றிலும் பரிசுத்தப்படுத்தி, என் பலிபீடம் செப்பனிட தேவன் உதவி செய்தார். தேவனின் கிருபையால் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றேன். கர்த்தர் என்னை அக்கினி அபிஷேகத்தால் நிரப்பினார். தம்முடைய யுத்த சேனைக்கென்று தெரிந்தெடுத்தார். கடைசி கால



சுவிசேஷம் அறிவிக்க செல்லும்போது...

எழுப்புதலில், எனக்கென்று ஒரு சிறுபங்கை நியமித்து தேவன் என்னை உருவாக்கி அனுப்பினார். முகாம் முடிந்த அடுத்த நாளிலிருந்து சுவிசேஷம் அறிவிக்க ஆயத்தப்படுத்தி வழியைக் காண்பித்தார். ஆனால் எப்படி போவது? எங்கு போவது என்று எனக்குள் ஒரு தடுமாற்றமாகவே இருந்தது. அப்போது ஆண்டவர் ஒரு இடத்தை காண்பித்து அங்கிருந்து ஆரம்பிக்க சொன்னார். நானும் என் தோழியுமாக கைப்பிரதிகளை கொடுத்து சுவிசேஷம் சொல்ல ஆரம்பித்தோம்.

### இவ்வளவு செய்த கர்த்தருக்காக நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

எனது ஆவிக்குரிய நண்பர்களுடன் இணைந்து ஜெபிக்கவும், கர்த்தருக்கென்று சிறு ஊழியமும் செய்கிறேன். அதிக நேரம் தேசத்திற்காக ஜெபித்து வருகிறேன். Tracts Ministry & Village Ministry எனது தோழிகளுடன் இணைந்து செய்து வருகிறோம். தனிப்பட்ட வகையிலும், என்னால் இயன்ற வரை சுவிசேஷம் அறிவிக்கிறேன் (one to one gospel). Instragram, Whatsapp-லும் என்னால் இயன்ற வரை கர்த்தருக்கென்று இயேசுவை அறிவிக்கும் விதமாக பயன்படுத்தி வருகிறேன்.

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நம் வாழ்வில் வரும் தோல்விகளுக்கு காரணம் தெரியாமல் அநேகர் இருக்கிறோம். தாயின் கருவில் உருவாகும் முன்னே தெரிந்து கொண்ட நேசர், நம் வாழ்விலும் ஒரு உன்னதமான திட்டம் வைத்திருப்பார். தேவனின் சித்தம் அறிந்து, நம் வாழ்வை அவருக்கென்று அர்ப்பணிக்கும் பொழுது, அவர் நம்மை உயர்த்துவார். அதுவரை அவருடைய பலத்த கரங்களுக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும். அவரின் சித்தம் அறிந்து, நம் தேசத்திற்காக திறப்பிலே நின்று கதறும்போது, அவர் நம் இருதயத்தின் வேண்டுதல்களை நிறைவேற்றுவார்.

**அன்பான வாலிபர்களே, இன்றைக்கு நீங்களும் கூட என்னால் எதிலும் வெற்றிபெற முடியவில்லை, பாவத்தை மேற்கொள்ள முடியவில்லை ஆண்டவரோடு ஐக்கியம் வைக்க முடியவில்லையே என்று சோர்ந்து போய் இருக்கிறீர்களா, சோர்ந்து போகாதீர்கள்... சகோதரி ஜனி லோவிசாள் வாழ்க்கையில் ஆண்டவர் எப்படி ஒரு திருப்புமுனையைக் கொண்டு வந்தாரோ அதேபோல் உங்கள் வாழ்க்கையிலும் ஒரு திருப்புமுனையை வைத்திருக்கிறார். காத்திருந்து ஜெபியுங்கள் ●**

நிகழ்வு: ஜீலியட் கிளார்வின்

# வேதமும், விஞ்ஞானமும்!



## விண்வெளி அறிவியலும் பரிசுத்த வேதாகமமும்!

**பூமி உருண்டை என்பதை முதன் முதலில் வெளிப்படுத்தியது வேதமே!**



### பூமி தட்டையா உருண்டையா? (Earth is flat or spherical?)

**Aristotle, Plato, Aristarchus** இவர்கள் எல்லாம் பூமி தட்டையாக உள்ளது என்றே கூறி வந்தனர். ஆனால் கி.மு. 500ல் வாழ்ந்த Pythogoras என்பவர் தான், பூமி உருண்டையாக உள்ளது என்பதை கண்டுப்பிடித்தார். Aristotle, Plato என்பவர்களால் இதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனவே பூமி தட்டையாக உள்ளது என் பதனையே நம்பி வந்தனர்.

16ம் நூற்றாண்டில்தான் பூமி உருண்டையாக உள்ளது என்பதை Galileo என்னும் விஞ்ஞானி நிரூபிக்க விஞ்ஞான உலகம் அதனை ஏற்றுக் கொண்டது.



Pythogoras

விஞ்ஞான உலகம் பூமி தட்டையா (flat), உருண்டையா (spherical) என்று சண்டையிட்டு கொண்டிருக்க, 2500 வருடங்களுக்கு முன்பே, பூமியை உருவாக்கின தேவன் **"அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்..." (ஏசாயா 40:22)** என்பதை தெரிவித்திருக்கிறார்.



Galileo

### பூமி எவ்வாறு நிலைநிற்கிறது? (How does the earth stand?)



Sir Issac Newton

பூமி 5 தூண்களால் நிற்கிறது என்று எகிப்தியர்கள் நம்பினர். Atlas சுமந்துக் கொண்டிருக்கிறான் என்று கிரேக்கர்கள் நம்பினர். யானையும் பாம்பும் சுமந்துக் கொண்டிருக்கிறது என்று இந்தியர்கள் நம்பினர். Sir Issac Newton தான் பூமி அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நிரூபித்தார்,

இவ்விஞ்ஞான கருத்தை பரித்த வேதாகமத்தில் யோபின் புத்தகத்தில் தேவனே யோபுவிற்கு வெளிப்படுத் தியிருக்கிறார். **"அவர் உத்தர மண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்" (யோபு 26:7).**

**நம்முடைய விஞ்ஞானிகளான Sir Issac Newton கண்டு பிடிப்பதற்கு முன்பே, பரிசுத்த வேதம் நமக்கு வெளிப்படுத்தி விட்டது ●**

முகப்பு செய்தி: சதீஷ்

# உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம்!



நம் வாழும் இந்த உலகில் ஆயிரக்கணக்கான பிரிவுகள், மொழி, மதம், இனம் கலாச்சாரங்கள் இருக்கின்றன. எத்தனையோ தெய்வங்களை இந்த உலகத்தில் ஜனங்கள் வழிப்பட்டாலும், எல்லா தெய்வங்களுக்கும் மேலான தெய்வம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ''யெகோவா எலியோன்'' என்ற கர்த்தருடைய நாமம். தமிழில் ''உன்னதமான தேவன்'' என்று மொழி பெயர்க்கப் படுகிறது. இந்த உன்னதமான தேவனைக் குறித்து தாவீதுடைய அனுபவம் என்னவெனில், **''உன்னதங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமான மானவர் யார்?'' (சங்கீதம் 113:5)** என்று கேட்கிறார். ஆண்டவருக்கு நிகராக இந்த உலகில் எதுவுமே இல்லை. உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறித்து இந்த மாதம் நாம் பார்க்கப் போகிறோம்.



நம் எல்லோருடைய மனதிலும் மினிமம் பட்ஜெட்டில் நல்ல தரமான Shoe எடுக்க வேண்டுமானால் எல்லோருக்கும் நினைவு வருவது Bata Show Room தான். இந்த Bata Shoe Company-யை நிறுவியவர் தாமஸ் பேட்டா. சாதாரண செருப்பு தைக்கும் குடும்பத்தில் பிறந்த இவர் 1894ஆம் ஆண்டு தன்னுடைய சகோதர, சகோதரியின் உதவியுடன் Bata Shoe தயாரிக்கும் கம்பெனியை ஆஸ்திரியாவிலுள்ள ஹங்கேரியில் நிறுவினர். தற்போது இது செக்குடியரசாக உள்ளது. தொழில் தொடங்கிய ஆரம்ப கால கட்டத்தில் நஷ்டம் ஏற்பட்டாலும் ஆண்டவருக்கு செலுத்த வேண்டிய தசமபாகம் காணிக்கையை தவறாமல் செலுத்தி விடுவார். ஒரு நாள் பெஸ்டான Shoe ஒன்றை தயாரித்து அதை விற்று, அதன்மூலம் வரும் வருமானத்தை ஆண்டவருக்கு கொடுக்க வேண்டுமென்று நினைத்தார். கர்த்தருக்காக கொடுக்க வேண்டும் என்ற அவருடைய இருதயத்தைப் பார்த்து, அது முதல் கர்த்தர் அவரை ஆசீர்வதிக்க தொடங்கினார். 1960-70ஆம் ஆண்டுகளில் பேட்டா வெள்ளை கேன்வாஸ் Shoe உலககெங்கும் இருக்கும் பள்ளி மாணவர்களை ஈர்த்தது, 1980-90ஆம் ஆண்டுகளில் எத்தனையோ போட்டியாளர்கள் Bata நிறுவனத்திற்கு எதிராக போட்டா போட்டி போட்டாலும் Bata-வின் விற்பனையை தடுக்க முடியவில்லை. 10 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கம்பெனியில் இன்று 35,000க்கும் அதிகமானோர் வேலை செய்கின்றனர். மேலும் 70 நாடுகளில் 5,800க்கும் அதிகமான Bata Show Room நிறுவப்பட்டுள்ளது. இதை எல்லாவற்றையும் தாண்டி 18 நாடுகளில் உற்பத்தி செய்யும் உரிமத்தை பெற்றுள்ளது. இந்தியாவில் மட்டும் 5 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. ஒரு வருடத்திற்கு Bata Company 180 Millons Shoe-களை விற்பனை செய்கிறது என்பது உங்களால் நம்ப முடிகிறதா? ஆனால் அதுதான் உண்மை. உலகளவில் ஒரு நாளைக்கு 10 Millon வாடிக்கையாளர்கள் Bata Show Room-யை தேடி செல்கின்றனர் என்பது ஆச்சரியமான தகவல் ஆகும். எப்படி இந்த Bata கம்பெனி இப்படி ஆசீர்வதிக்கப்பட்டது என்று தானே யோசிக்கிறீர்கள்? நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் உன்னதமான தேவனாகிய கர்த்தரை கனம் பண்ண







வேண்டும். மேலும் நாம் எதைச் செய்தாலும் அதைக் கர்த்தரின் மகிமைக்கென்று செய்ய வேண்டும். **''உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு.''** நாம் கர்த்தரைக் கனம் பண்ணும் பொழுது, **''அப்பொழுது உன் களஞ் சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்'' (நீதி. 3:9,10)** என்று வேதம் சொல்கிறது. தாமஸ் பேட்டா அவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் உன்னதமான தேவனை உயர்த்தி கனப்படுத்தினபடியால் கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஆண்டவரை உயர்த்தும் போது உன்னதமான தேவன் உங்களை உன்னதங்களில் இருந்து ஆசீர்வதிப்பார். பாபிலோன் தேசத்தில் அடிமையாய் இளம் வயதில் சென்ற தானியேல் தன்னுடைய எல்லா காரியத்திலேயும் கர்த்தரை கனம் பண்ணினார். **''அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக் களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத் துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத் தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்'' (தானி.2:21)** என்று புற ஜாதிகள் மத்தியில் உன்னதமான தேவனை உயர்த்தினதால்தான் அவர் 120 தேசத்தின் தேசாதிபதிகளுக்கும் பிரதானிகளுக்கும் அதிகாரியாக கர்த்தர் அவரை உயர்த்தினார். நீங்கள் எங்கு இருந்தாலும் சரி உன்னத தேவனை உயர்த்திப் பாருங்கள், அவர் உங்களை உயர்த்துவது அதிக நிச்சயம். ஆண்டவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது பூமி தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு இருந்தது என்று பார்க்கிறோம். ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்ட விதத்தைப் பாருங்கள், **''... உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக'' (ஆதி. 14:18,19)** என்று வாழ்த்தினார்.



இந்த அளவிற்கு ஆண்டவர் ஆபிரகாமை ஆசீர்வதிக்க காரணம் என்ன என்று தானே யோசிக்கிறீர்கள்? ஆபிரகாம் தன்னுடைய வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் உன்னதமான தேவனை கனப்படுத்தி உயர்த்தினபடியால் ஆண்டவர் அவரை ஆசீர்வதித்தார். உங்களுடைய வாழ்க்கையில் ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த திறமை, படிப்பு, வேலை, பொன் பொருள் எல்லாவற்றிலும் நீங்கள் தேவனை உயர்த்தும் போது உன்னதமானவரின் ஆசீர்வாதங்கள் உங்களுக்கு உண்டாகும்.

ஆபிரகாமை ஆண்டவர் பூமிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதித்தது மட்டுமில்லாமல்அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் ஆசீர்வதித்து இருந்தார். ஆசீர்வாதங்களில் பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் உண்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் உண்டு, உன்னதங்களுக்குரிய ஆசீர்வாதங்களும் உண்டு. இந்த உன்னதங்களுக்குரிய ஆசீர்வாதத்தை நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் பெற்று இருக்கிறோம். **''...அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே. 1:3)** என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

**எனக்கன்பான வாலிபர்களே! உன்னதங்களிலே வாசம் பண்ணும் தேவனோடு உலாவி உன்னதப்பாட்டுகளைப் பாடி உன்னதமானவரின் நேசத்தால் நீங்கள் ஒவ்வொரு நாளும் நிரம்பியிருப்பது எவ்வளவு பாக்கியம். உன்னதமானவரோடு பரலோக இராஜ்ஜியத்தில் நித்திய நித்தியமாக மகிழ்ந்திருப்பீர்கள். நீங்கள் உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு எப்பொழுதும் மகிமையை செலுத்துங்கள். அப்பொழுது நீங்கள் உன்னதமான தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்** ●

# குற்றவுணர்வு...

ஆலோசனை: அலி




*நான் ஊட்டியிலுள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். ஆலய ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்வேன். சில நாட்களுக்கு முன்பு என்னை அறியாமலே நான் பின்மாற்றத்திற்குள் சென்று, ஆபாசப்படங்களைப் பார்த்து வருகிறேன். ஏதோ ஒன்று என்னை வற்புறுத்தி செய்யத் தூண்டியது. தற்போது நான் குற்ற உணர்வினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். தேவன் என்னை மன்னிப்பாரா? ஆபாசப் படம் பார்க்க வேண்டும் என்ற உணர்வு அவ்வப்போது வருகிறது. என்னால் அந்த இச்சையைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. திரும்பத் திரும்ப நான் இந்த பாவத்திற்குள் சென்று விடுகிறேன். தேவனை நான் மீண்டும், மீண்டும் ஏமாற்றுவதாக எனக்குத் தோன்றுகிறது. தேவன் என்னை மன்னிக்கும்படி மன்றாடினாலும், மீண்டும் அதேப் பாவ சேற்றிற்குள் நுழைகிறேன். எப்படியும் நான் பரலோகம் போகப் போவதில்லை, இப்படியே இந்தப் பாவ வாழ்க்கையில் இருந்து விட்டால் என்ன? என்று கூட தோன்றுகிறது. இந்தப் பாவக் கட்டுகளிலிருந்து நான் எப்படி வெளிவருவது என்று எனக்குத் தெரியவில்லை. இந்த தீய பழக்கத்தினால் எனது படிப்பும் பாதிக்கப் பட்டுள்ளது. தயவு செய்து எனக்கு ஆலோசனை கூறவும்*

*- ஆல்பிரட், ஊட்டி.*

அன்பு சகோதரர் ஆல்பிரட்! தாங்கள் தற்போதுள்ள உங்களது சூழ் நிலையையும், உங்களது மனவேதனைகளையும் என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. தேவப் பிள்ளையாகிய நீங்கள் உங்களை அறியாமலே இந்தப் பாவத்திற்குள் சிக்கி விட்டீர்கள். பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல யாரை விழுங்கலாம் என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான் என்று வேதம் தெளிவாக கூறுகிறது. உங்களுடைய சிறிய கவனக்குறைவினால், பிசாசு அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உங்களை அப்பாவத்திற்குள் இழுத்துச் செல்வான்.

பல நேரங்களில் வாழ்க்கையில் பிசாசிற்கு கதவை திறந்து கொடுக்கிறோம். பிசாசு உள்ளே வரும்போது, ஒருமுறை கதவை அடைத்து விட்டோமேயானால், அவனுக்கு வழியில்லை என்று போய்விடுவான். பிசாசு மீண்டும் நம் அருகே வரவே முடியாது. அவன் ஒரு பல் இல்லாத சிங்கம், செத்த பாம்பு அவனால் பயமுறுத்த மட்டும் தான் முடியுமே தவிர அவனால் நம்மை மேற்கொள்ள முடியாது, நாம் வாய்ப்பு கொடுக்காத வரை மட்டுமே அவனால் நம்மை அதிகாரம் செய்ய முடியாது.

பிசாசு உள்ளே வர எங்கே வழியை திறந்து கொடுத் துள்ளீர்கள் என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள். உங்களை இந்த அசுசியானக் காரியங்களைப் பார்க்கத் தூண்டியது எது? முதலில் சிந்தனையில் இது சிறிய எண்ணமாக தோன்றியது. நாம் அதை அறியாமல் இருந்து விட்டதால் அது இச்சையாய் மாறுகிறது. பின்பு அது தீட்டான, பரிசுத்த குலைச்சலானக் காரியங்களைச் செய்ய வழிவகுக்கிறது. நாம் தேவனுடையப் பிள்ளைகளாய் வாழும்போது கிறிஸ் துவுக்குள் எப்போதுமே நமக்கு வெற்றி உண்டு. தேவையில்லாத சிந்தனைகளை கட்டுப்படுத்தினால் மட்டுமே, அடிமைத் தனமாக்குகிற இச்சைகளிலிருந்து விடுவிக் கப்பட முடியும். பிசாசின் கட்டளையின்படி இச்சைகளினால் தூண்டப்பட்டு, செயல் படுத்தப்பட்டால் நீங்கள் குற்றவாளியாக்கப் படுவீர்கள். பிசாசிற்கு எதிர்த்து நின்றால், இச்சைகளைத் தூண்டுகிற எண்ணங்களை சிந்தையிலிருந்து விட்டு விட்டால் மட்டுமே இதை மேற்கொள்ள முடியும்.





ஆல்பிரட்! நீங்கள் சரியான நடவடிக்கை எடுத்தால் இந்தப் பாவத்தை மேற்கொண்டு, ஜெயம் பெற முடியும். ஏனென்றல், நமது தேவன் கெர்ச்சிக்கிற யூதாகோத்திரத்து யுத்த சிங்கம். பாவத்தின் மீதும், பிசாசின் மீதும் வெற்றி சிறந்தவர். எனவே நாமும் பிசாசின் எல்லா திட்டங்களிலிருந்தும் வெற்றி பெற முடியும்.

## சில நடைமுறை உதவிக் குறிப்புகள்

■ ஆல்பிரட்! இதை விட்டு வெளியே வர இரவு நேரத்தில் மொபைல் போன் மற்றும் பிற மின்னணு கெஜெட்டுகளை பயன்படுத்த மாட்டேன் என்று உறுதியாக தீர்மானிக்க வேண்டும்.



■ சமூக வலைத்தளங்களிலிருந்து இரண்டு மாதங்களுக்கு விலகியே இருங்கள். தேவையற்ற எல்லா App-களையும் பயன்படுத்த வேண்டாம். மற்ற எந்த வேறு தளத்தையும் பார்க்க வேண்டாம். கிறிஸ்தவ செய்திகளையோ, பிற வீடியோக்களையோகூட சில வாரங்களுக்குப் பார்க்க வேண்டாம்.

■ இரவு 9 மணிக்கு மேல் பொழுதுபோக்கிற்காக வீடியோக்களோ, மொபைல் போனோ உபயோகிக்கக் கூடாது என்று முடிவு செய்யுங்கள்.

■ லேப்-டாப் மற்றும் மொபைல் போன்களை வீட்டின் முன் அறையில் அல்லது ஹாலில் வைத்து பயன்படுத்தவும். தனியறையில் வைத்து பயன்படுத்த வேண்டாம்.

■ தேவையற்ற பாப்அப்களைத் தவிர்க்க, ஆப்ஃலைனில் உங்கள் படிப்பு மற்றும் வேலை சம்மந்தப்பட்டவைகளை செய்யலாம். ஆன்லைனில் இருந்தால் தேவையில்லாத வற்றை பார்க்கத் தோன்றும்.

■ ஆன்ட்ராய்டு போனைப் பயன்படுத்துவதால் உங்களுக்கு சோதனை ஏற்படுமாயின், நீங்கள் சாதாரண பட்டன் போனை உபயோகப்படுத்தலாம். இது தகவல் தொடர்புக்கு மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.



■ உங்கள் கண்களால் பார்க்கும் படங்கள், இச்சைகளை தூண்டுவதாக இருந்தால் அதற்கு இடமளிக்க வேண்டாம். அது கண்ணியாக மாறிவிடும்.

## பிசாசின் வலையிலிருந்து தப்பிக்க ஆவிக்குரிய ரீதியாக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள்

■ உங்கள் ஜெபம் வல்லமை உள்ளது. ஏனென்றால் இயேசுவின் நாமத்திற்கு மட்டுமே பிசாசு நடுங்குவான்.

■ தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில், தொடர்ந்து ஜெபிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளும்போது பாவத்தை மேற்கொள்ள முடியும்.

■ ஜெப நேரத்தோடு வேத வாசிப்பையும் இணைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் வேதம் என்பது கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமாக இருக்கிறது. எவ்வளவு அதிகமாக நாம் வேதத்தை தியானிக்கிறோமோ அவ்வளவு வெளிப்பாடுகள் பெற்றுக் கொண்டு அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்.

■ வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே என்று சங்கீதம் 119:9ம் வசனம் கூறுகிறது.

■ வேத வசனத்தை இருதயத்திலும், மனதிலும் வைத்து செயல்படாதவரை பாவத்தை மேற்கொள்ள முடியாது.

**கர்த்தர் சகலத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். அவரே உங்களுக்கு பாவத்திலிருந்து ஜெயத்தைத் தருவார். நீங்கள் குற்றவாளி அல்ல, கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றியாளர் என்பதை மறந்துவிடாதீர்கள். தேவனைச் சார்ந்து கொள்ளுங்கள் ●**



# நான் உனக்கு முன்பாகப் போவேன்!



செய்தி: சகோ.மோகன் சி.லாசரஸ்

**“என் மகளே(ன), நான் உனக்கு முன்பாகப் போவேன்! நான் உனக்கு முன்பாக நடக்கிற தேவன்! உனக்கு எந்த ஆபத்து வந்தாலும், அது என்னைத் தாண்டித்தான் உன்னிடத்தில் வர முடியும்! நான் உனக்கு முன்பாக இருக்கிறேன் நீங்கள் பயப்படாதீர்கள்!” என்று கர்த்தர் உங்களைப் பார்த்து சொல்கிறார். “...கர்த்தர் உங்கள் முன்னே போவார்” (ஏசாயா 52:12).**

## பயப்படாதிருங்கள், கர்த்தர் தடைகளை நீக்கிப் போடுவார்!

**“தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு (நமக்கு) முன்பாக நடந்துபோகிறார்; ...கர்த்தர் அவர்கள் (நமக்கு) முன்னணியில் நடந்து போவார்” (மீகா2:13).** எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து, கானான் தேசத்திற்கு வழி நடத்திக் கொண்டு போகிற வழியில், அனேகத் தடைகள் வந்தது. அத்தனை தடைகளையும் தேவன் நீக்கிப் போட்டு, தம்முடைய ஜனங்களை கானான் தேசத்திற்குள் கொண்டு போய் சேர்த்தார். அதே போல ஒரு காலத்தில் பாவத்திலும், சாபத்திலும் விழுந்து கிடந்த நம்மை தேவனாகிய கர்த்தர் விடுதலையாக்கி, பரம கானானை நோக்கி வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அதாவது அவருடைய வருகையில் நாம் காணப்படுவதற்கு நம்மை வழிநடத்திக் கொண்டு போகிறார். ஆனாலும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில், உலகப் பிரகாரமான வாழ்க்கையில், குடும்ப வாழ்க்கையில், தொழிலில் நாம் முன்னேறிப் போக முடியாதபடி சாத்தான் அனேக விதமான தடைகளைக் கொண்டு வருவான்.



**“எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது;” (யோசுவா :1).** இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக ‘எரிகோ’ பட்டணத்தின் பெரிய மதில் சுவர் தடையாக நின்றது. அந்தப் பட்டணத்தை அவர்கள் சுதந்தரிக்க வேண்டும். இடிக்கவே முடியாத, மிகவும் உயரமான மதில் சுவர் அது! அதை எப்படி சுதந்தரிப்பது? தேவனாகிய கர்த்தர் யோசுவா மூலமாக அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே கர்த்தரை அவர்கள் துதித்த போது, அந்த மதில் சுவர் விழுந்தது! வழி திறந்தது! தடைகள் எதுவாக இருந்தாலும் சரி, அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, தேவனாகிய கர்த்தரால் அதை மாற்றித் தர முடியும்!

ஒரு சமயம், ஒரு குடும்பத்தார் என்னிடத்தில் ஜெபிக்க வந்தார்கள். அவர்கள் மிகுந்த வேதனையோடு, மகனுக்கு வேலை கிடைக்கிறதைப் போல இருக்கிறது, ‘ஒரு வீட்டைக்

கட்டி முடித்து விடலாம்!' என்று எவ்வளவோ முயற்சிகளைச் செய்து பார்க்கிறோம். ஆனால், கட்டி முடிக்கவே முடியாமல் தடைபட்டு பாதியிலேயே நிற்கிறது. எங்களால் எதிலுமே முன்னேறிப் போக முடியவில்லை என்று மிகுந்த வேதனையோடு சொன்னார்கள். தடைகளை நீக்கிப் போடுகிற தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு முன்பாக நடக்கிறார்! அவர் உங்களோடு கூட இருக்கிறார்! அவரை உங்களுக்கு முன்பாகப் போவதற்கு அனுமதியுங்கள். நீங்கள் அவருக்கு முன்பாக போகாதிருங்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைச் சொல்லி, அவர்களுக்கு ஆலோசனைக் கொடுத்து, ஜெபித்து அனுப்பினேன். அவர்களும் நான் சொன்னபடியே, என்னென்ன தடைகள் இருந்ததோ, அவைகளை எல்லாம் எழுதி வைத்து, குடும்பமாக உபவாசம் பண்ணி ஜெபித்தார்கள். தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய அந்த ஜெபத்தைக் கேட்டு, உடனே ஒரு வழியைத் திறந்து கொடுத்தார். எல்லாத் தடைகளையும் மாற்றி, அவர்களுடைய மகனுக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கப் பண்ணினார்! வீட்டை கட்டி முடிப்பதற்கும் கிருபை செய்தார்!

பயப்படாதிருங்கள்! இன்றைக்கு நீங்களும்கூட குடும்பமாக உபவாசம் பண்ணி, உங்கள் வாழ்க்கையில் என்னென்ன தடைகள் இருக்கிறதோ, அவைகளை எல்லாம் ஒரு காகிதத்தில் எழுதி, அதை தேவ சமூகத்தில் வைத்து ஜெபியுங்கள். அப்படியே நடக்கும்! காரணம், தடைகளை நீக்கிப் போடுகிற சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு முன்பாகப் போகிறார்! ஆகவே, பயப்படாதிருங்கள்!

**பயப்படாதிருங்கள், கர்த்தர் சரியான வழியில் நடத்துவார்!**

**''அவர்கள் (இஸ்ரவேல் ஜனங்கள்) இரவும்பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்'' (யாத். 13:21).**



எகிப்து தேசத்தில் 430 வருடங்கள் அடிமையாக இருந்த, கிட்டத்தட்ட30 லட்சத்திற்கும் அதிகமான இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு, வனாந்திரத்தின் வழியாக கானான் தேசத்திற்கு பிரயாணப்பட்டுப் போனார்கள். கானான் தேசத்திற்குப் போகிறதற்கான வழியும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களை விடுவித்துக் கொண்டு வருகிற தேவனாகிய கர்த்தர்தான் அவர்களை வழிநடத்திக் கொண்டு வந்தாக வேண்டும். ஆகவே தேவனாகிய கர்த்தர் பகலில் பிரமாண்டமான ஒரு பெரிய மேக தூண் போன்ற ஸ்தம்பத்தை அவர்களுக்கு முன்பாகப் போகும் படியாகச் செய்தார். இரவு நேரங்களில் அந்த மேக ஸ்தம்பம் வெளிச்சம் கொடுக்கத்தக்கதான அக்கினி ஸ்தம்பமாக மாறி விடும்! தேவனாகிய கர்த்தர் எவ்வளவு அற்புதமாக இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறார் பாருங்கள்!



சேலம் மாவட்டம் ஏற்காடு மலை பிரதேசத்திற்கு பென்னட் என்கிற என்னுடைய நெருங்கிய நண்பர் மலைவாசி மக்களுக்கு ஊழியம் செய்வதற்காக அடிக்கடி சென்று வருவார். சில சமயங்களில் திரும்பி வருவதற்கு இரவாகி விடும். அப்படி ஒருமுறை அவர் ஊழியத்தை முடித்து திரும்பி வரும்போது, இருட்டாகி விட்டது. அவர் நடந்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்தபோது, அந்த இடத்தில் இரண்டு வழிகள் பிரிந்து போனது. பகலிலேயே வெளியே போய் விட்டு, சரியான வழியைக் கண்டு பிடித்து திரும்பி வருவது அவ்வளவு கஷ்டமான காரியம். இந்த நிலைமையில் அந்த கும்மிருட்டு வேளையில், ''எந்த வழியில் போவது?'' என்று தெரியாமல் தடுமாறிப் போனார். அந்த இடத்திலேயே நின்று, ''இயேசுவே, எந்த வழியில் போவது?'' என்று எனக்குத் தெரியவில்லை. சரியாக எனக்கு வழி காட்டும்!'' என்று சொல்லி, ஒரு சிறிய ஜெபம் செய்தார். ஜெபம் பண்ணி முடித்தபோது, அவருக்கு முன்பாக சில அடிகள் தூரத்தில் ஒரு டார்ச் வெளிச்சத்தைப் போன்ற ஒரு வெளிச்சம் தெரிந்தது! ''அந்த வெளிச்சம் எங்கிருந்து வருகிறது?'' என்று அவர் பார்த்தபோது, அவரால் கண்டுபிடிக்கவே முடியவில்லை! அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்! அந்த வெளிச்சம் அப்படியே மெதுவாக நகர்ந்து நகர்ந்து, அவரை சரியான வழியில் நடத்தி, அவருடைய இருப்பிடத்தில் கொண்டு போய் சேர்த்து விட்டு, அப்படியே மறைந்து போய் விட்டது!

இன்றைக்கும் உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில், ''படிக்க வேண்டுமா? அல்லது வேலைக்குச் செல்ல வேண்டுமா?'' என்று

தெரியவில்லையே! இப்போதைக்கு என் தேவைக்கு என்ன செய்வது? இந்த வேலை என்னை விட்டுப் போய் விட்டால் அடுத்து என்ன செய்வது? என்று தடுமாறிக் கொண்டிருக்கிறீர்களா? பயப்படாதீர்கள்! வழிநடத்தும் தேவன் உங்களுக்கு முன்பாக போகிறார்.



**பயப்படாதிருங்கள், கர்த்தர் உங்கள் முன்பாகப் போவார்!**



தாவீதின் சத்துருக்களான பெலிஸ்தியர்கள் தாவீதுக்கு விரோதமாக எழும்பி, யுத்தம் பண்ண வந்தார்கள்! அப்போது தேவனாகிய கர்த்தர், பயப்படாதே! முசுக்கட்டைச் செடியின் நுனியிலே செல்கிற இரைச்சலை உன் காதுகள் கேட்கும். அதுதான் உனக்கு அடையாளம்! சத்துருக்கள் உன்னை எதிர்த்துவரும்போது, நீ முன்னால் போகாதே. உனக்கு முன்னால் நான் போகிறேன். உனக்காக நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்! நான் யுத்தம் பண்ணுகிறேன், நீ என் பின்னால் வந்து கொண்டேயிரு என்று அருமையான ஒரு ஆலோசனைக் கொடுத்தார். தாவீதுக்காக கர்த்தர் யுத்தம் பண்ணி ஜெயித்து விட்டார்! அந்த வெற்றியை தாவீது சுதந்தரித்துக் கொண்டார்! (2 சாமுவேல் 5:23-25).

ஒரு வயதான தம்பதியினரை நான் சந்தித்தேன். அந்தத் தகப்பனார் வங்கியில் ஒரு அதிகாரியாக பணியாற்றியதால் இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு அவர் பணி இடம் மாற்றம் செய்யப்பட்டு, பணி செய்து கொண்டிருந்தார். பணி ஓய்வு பெற்ற பிறகு வசிக்க சொந்தமாக வீடு கட்டி, 25 வருடங்களாக ஒரு குடும்பத்தினருக்கு வாடகைக்குக் கொடுத்திருந்தார். பணி ஓய்வு பெற்று வந்தவுடன், வீட்டை காலி பண்ண சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கோ அந்த வீட்டைக் கொடுக்க மனமில்லை. அந்த வயதான தம்பதியினர் கர்த்தருக்கு சாட்சியாக வாழ்ந்து கொண்டிருந்தவர்களானதால் கர்த்தருடைய சமூகத்தில் மிகுந்த பாரத்தோடு கருத்தாக ஜெபித்தார்கள். அந்த வீட்டை அபகரிக்க நினைத்த அந்தக் குடும்பத்தார் மந்திரம் செய்து அவர்களை அழித்துவிட நினைத்தார்கள். ஒருநாள் மந்திரவாதி மந்திரம் பண்ணிக் கொண்டிருக்கும்போது திடீரென்று அந்த இடத்தில் ஒரு பிரகாசமான வெளிச்சம் தோன்றியது! அவன் எதிர்பார்த்திருந்த அசுத்த ஆவி வரவில்லை! மாறாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வந்து நின்று, அந்தக் குடும்பத்தாரை உடனே வீட்டை காலி பண்ணிக் கொடுக்கச் சொல். இல்லாத பட்சத்தில் என்னுடைய கரத்தை அவர்களுக்கு விரோதமாக நான் நீட்ட வேண்டியது வரும்! என்று சொல்லி எச்சரித்து விட்டு மறைந்து போய் விட்டார்! உடனே மந்திரவாதி அந்தக் குடும்பத்தாரிடம், ''இனியும் அந்த வீட்டில் இருந்தால், உங்களுடைய வீட்டில் கொடிய மரணம் சம்பவிக்கும்!'' என்று சொல்லி விட்டது! ஆகவே உடனே அந்த வீட்டைக் காலி பண்ணி, அவர்களிடத்தில் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அந்த வார்த்தையைக் கேட்ட அவர்கள் பயந்து போய், உடனே வீட்டைக் காலி செய்து கொடுத்து விட்டுப் போய் விட்டார்கள்!

நமக்காக யுத்தம் பண்ண தேவனாகிய கர்த்தர் ஒருவர் இருக்கிறார். உங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ண யார் வேண்டுமானாலும் எழும்பட்டும்! நீங்கள் தேவனாகிய கர்த்தருடைய பிள்ளையாக இருக்கிற பட்சத்தில், உங்களை எதுவுமே அசைக்க முடியாது! காரணம், உங்களுக்காக யுத்தம் பண்ணுகிற தேவனாகிய கர்த்தர் உங்கள் முன்பாகப் போகிறார்! ஆகவே, எதைக் குறித்தும், எப்பேர்ப்பட்ட சூழ்நிலையைக் குறித்தும் நீங்கள் பயப்படாதிருங்கள்!

**அன்பான வாலிபர்களே! கர்த்தர் உங்கள் முன்பாக சென்று தடைகளை மாற்றி சரியான பாதையில் நடத்தி செல்ல வேண்டுமானால், அவருடைய வாக்குத்தத்தங்களை வைத்து ஜெபியுங்கள். திருமணக் காரியமாக இருந்தாலும், வேலைக் காரியமாக இருந்தாலும் கர்த்தர் உங்களுக்கு முன்பாக சென்று கோணலானவைகளை செவ்வையாக்குவார். பயப்படாதீர்கள்! கர்த்தர் உங்கள் முன்னேப் போவார்!!** ●

புதிர்: ரேச்சல்

# வேதாகம

## புதையல் வேட்டை




கீழே வேதத்தில் நண்பர்களாயிருந்தவர்களைக் குறித்தக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. சரியான விடையைக் கண்டறிந்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வினாக்கள்

- நண்பர்களைப்போல நடித்து யோசுவாவை ஏமாற்றி, அவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் யார்?
- இரவு பகல் ஏழுநாள் யோபுவுடன்கூட தரையில் உட்கார்ந்திருந்த யோபுவின் நண்பர்கள் யார்?
- ஆணையிட்டுக் கொண்டு இருவரும் நண்பர்களாகிய இரண்டு நபர்களின் பெயர்கள் என்ன?
- மணவாளனுடைய தோழனோ... மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான் என்று சொன்னது யார்?
- இயேசு கிறிஸ்துவினுடைய மிகநெருங்கிய நண்பர்களாக மாறிய மூன்று பேருடைய பெயர்கள் என்ன?
- எந்த அரசனும், ஆளுனரும் முற்காலத்தில் பகைவர்களாய் இருந்து பிறகு நியாய விசாரணையின்போது நண்பர்களாய் மாறினார்கள்?
- எந்த மனிதனும், அவனுடைய மனைவியும், பவுலுக்கு நண்பர்களாயிருந்தார்கள்?
- பல வருடங்கள் எந்த ஓர் இராஜா ஒரு தகப்பனுடனும், மகனுடனும் நண்பனாகவும், வியாபார கூட்டாளியாகவும் இருந்தான்?
- யார் 'தேவனுக்கு நண்பன்' என்று கருதப்பட்டான்?
- தனது இராஜாவிடமிருந்து தனக்கு மேல் பதவிக்கு உயர்வு வந்தபோது, தன்னுடைய மூன்று சிநேகிதர்களையும் உயர்த்த வேண்டும் என்று இராஜாவிடம் கேட்டுக் கொண்ட மனிதன் யார்?

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15. 08. 2020**

### கடந்த மாத வெற்றியாளர்

அன்புராஜ்,
கழுகுமலை



## கடந்த மாத விடைகள்

1. ரெபேக்காள் (ஆதி. 24:45,46)
2. ரெகுவேல் (யாத். 2:16-20)
3. புபிலியு (அப். 27:44; 28:7)
4. ஆபிரகாம் (ஆதி. 18:1-4)
5. எலியா (1 இராஜா. 17:8,9)
6. யோபு (யோபு 31:32)
7. லோத்து (ஆதி. 19:1,2)
8. தாவீது (மேவிபோசேத்து) (2 சாமு. 9:7-13)
9. சூனேமின் ஸ்திரீ (2 இராஜா. 4:8-10)
10. பவுல் (அப். 28:30)

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**Jesus Redeems Youth Ministries,**
**Nalumavadi, Thoothukudi Dist - 628 211.**
**Cell: 9750955547 | Tel: 04639- 353333 | youth@jesusredeems.org**



உண்மை சம்பவம்: வயலா

# சிம்சோன்

மௌன யுத்தம் - 5







பிறந்து சாதனை செய்யும் மனிதர்கள் உண்டு. சாதிப்பதற்காகவே பிறக்கும் அபூர்வ மனிதரும் உண்டு. வேதாகமத்தில் தாண் கோத்திரத்தைச் சேர்ந்த மனோவா தம்பதியின் மகனாகப் பிறந்தவர் ‘சிம்சோன்’. சிம்சோன் என்ற பெயருக்கு ‘சூரியனைப் போன்றவன்’ என்றுபொருள் இவருடைய அதிசயமான பிறப்பையும், வாழ்வையும் பற்றி நியாயாதிபதிகள் 13-16 அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் இஸ்ரவேலில் 20 வருஷங்களாய் நியாயாதி பதியாயிருந்தார். இவரது பிறப்பின் நோக்கம், இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பதாகும். எண்ணாகமம் 6ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட நசரேய விரதத்துக்கே இலக்கணமாக திகழ்வதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் அதனை அலட்சிய மனப்பாங்குடன் கடைபிடித்தார். இறந்த சிங்கத்தின் உடலிலிருந்து தேன் எடுத்து சாப்பிட்டது, பெலிஸ்திய பெண்ணை விரும்பியதும் திருமணம் செய்ய சென்றதும் தேவத் திட்டத்திற்கு மாறாக செயல்பட்டதைக் காண்பிக்கிறது. சிங்கத்தை தனி மனிதராக கிழித்துக் கொன்றவரும், கழுதையின் பச்சைத் தாடை எலும்பால் ஆயிரம் பேரைக் கொன்று வீழ்த்தியவருமான சூப்பர் மனிதரான சிம்சோன் வித்தியாசமான சிந்தனை திறனும் பெற்றவர். 300 நரிகளைப் பிடித்து, இரண்டு இரண்டாக வால் பகுதியில் தீப்பந்தத்தை வைத்துக் கட்டி பெலிஸ்தரின் விளை நிலங்களுக்குள் அனுப்பி, விளைச்சல்களைச் சுட்டெரித்து நாசம் செய்தது, இவரது வினோத பழிவாங்கும் வீர விளையாட்டைக் காட்டுகிறது.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் முக்கிய திருப்பங்கள் இருக்கும் அந்தத் தருணத்தில் மனிதன் எடுக்கும் தீர்மானமே அவனது வாழ்வை வளமாக்கவோ/அழிக்கவோ செய்கிறது. சிம்சோனின் வாழ்விலும்கூட தெலீலாளின் வீட்டில் நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவமும் முக்கியமாக கருதப்படுகிறது. அந்தத் தருணத்தில் அவருக்குள்ளும் இரண்டு விதமான குரல்கள் இரண்டு விதத்தில் அறிவுறுத்தியிருக்கலாம் அந்த மௌன யுத்தத்தின் கற்பனைக் காட்சி இதோ...

**குரல் 1:** என்னுடைய மகா பெலத்தை அறிய இவ்வளவு ஆவலாய் இருக்கிறாளே! இவளிடம் சற்றுக் கவனமாய் இருக்க வேண்டும்.

**குரல் 2:** இவளது சிநேகம் மிகவும் இனிமையாக அல்லவா இருக்கிறது. இவளது அருகில், நேரம் போகிறதே தெரியவில்லையே. இவள் கோபித்தால், இவளைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியுமா?

**குரல் 1:** முதல்முறை பெலிஸ்திய பெண்ணிடம் ஏமாற்றப்பட்டதைப் போல் இவளிடமும் ஏமாற்றப்பட்டு விடக்கூடாது. ஆனால் மீண்டும், மீண்டும் நச்சரிக்கிறாளே.

சீக்கிரமாய் இந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டால் நல்லது.



**குரல்2:** இவ்வளவு இனிமையாக பழகுகிறவள், இவளா எனக்கு துரோகம் செய்வாள்?



**குரல் 1:** ஏன் செய்ய மாட்டாள்? மூன்று முறை நான் எனது மகா பெலத்திற்கான காரணத்தைப் பொய்யாக சொன்ன போது, உடனுக்குடனே பெலிஸ்திய அதிபதிகளுக்கு தகவல் கொடுத்து, பரிசோதித்தாளே! இவளிடம் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஒருநாளும் இவளிடம் உண்மையைக்கூறக் கூடாது.



**குரல் 2:** ஆனால் இவள் வருந்தினால், சாகத்தக்கதாய் என் மனம் விசனப்படுகிறது. இவளிடம் என் இரகசியங்களை வெளிப்படுத் தினால்தான் என்ன? என்ன செய்து விடுவாள்? பலமுறை பெலிஸ்தரின் சூழ்ச்சி களில் சிக்காமல் தப்பிய நான் எப்போதும் போல என் பெலத்தினால் உதறிப்போட்டு போய் விடுவேன். என்னை மீறி, யார் வந்து என்தலைமயிரைசிரைக்கமுடியும்? சீறிவந்த சிங்கத்தையே கிழித்த நான், சிரைக்க எவன் வந்தாலும் சின்னாபின்னமாக்கி விடுவேன்.

இவ்வாறு சிம்சோனின் மனதில் உரையாடல்கள் நடந்திருக்கலாம். அவரது நல்மனச்சாட்சி கூறிய எச்சரிப்பின் செய்தியை புறக்கணித்த அவரது முடிவு... அந்தோ பரிதாபம்! கோட்டையின் கதவையே பிடுங்கி வெளியேறிய சிம்சோனால் தெலீலாள் விரித்த சதி வலையை கிழித்து வெளியேற இயலவில்லை. பணத்துக்காக பலசாலியைச் சிறையாக்கினாள். கண்களால் கெட்ட மாவீரனின் கண்களும் பிடுங்கப்பட்டன. கர்த்தரின் பெலத்தில் ஆவேசமாய் எதிரிகளை பந்தாடிய கைகளை வெண்கல விலங்குகள் கட்டிப் போட்டன. உன்னத தமான கர்த்தரின் கரத்தில் கிரீடமாக விளங்க வேண்டியவர், சிறைச்சாலையில் குருட்டுக் கண் களில் நீர்வடிய மாவரைத்துக் கொண்டிருந்தார். எந்தக் கயிறையும் உடைத்தெறிந்த வீரன் ஒரு பெண்ணின் போலிப் பாசக் கயிற்றால் கட்டுண்டு வீழ்ந்தார். உன்னதமான கர்த்தரின் வல்லமை



நிறைந்த நியாயாதிபதி தன்னைக் குறித்த உன்னத தேவத் திட்டத்தை அலட்சியம் செய்ததினால், தாகோனின் கோவிலில் கோமாளியானார். நொறுங்கிய இருதயத்தோடு, உடைந்த பாத்திரமான சிம்சோன், இருளடைந்த கண்களில் கண்ணீரோடு மீண்டும் உன்னத கர்த்தரோடு ஒப்புரவாகி மன்றாடினார். விளைவு? உடைந்த பாத்திரம் ஆவியால் நிறைந்தது, தளர்ந்த கரங்கள் திடன் கொண்டன. மிகுந்த பெலத்துடன் தாங்கி நின்ற தூண்களை அசைத்தார். நொறுங்கி விழுந்தது கட்டிடம். சிம்சோன் உயிரோடு இருக்கையில் அவரால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், சாகும்போது அவரால் கொல்லப்பட்டவர்கள் அதிகம். சூரிய வீரன் பெலிஸ்தரோடு அஸ்தமனம் அடைந்தாலும், பிறக்கும் முன்பே சிம்சோனுக்கென்று தீர்மானிக்கப்பட்ட தேவத் திட்டம் நிறைவேறாமல் போகவில்லை.

இன்றும்கூட உன்னதமான கர்த்தரின் உன்னத திட்டத்தை செயல்படுத்த தெரிந்து கொள்ளப் பட்டிருக்கிற வீரனே! வீராங்கனையே! நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல. கர்த்தருக்காக சாதிக்கப் பிறந்தவர்கள்! கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கும் தேவத் திட்டத்தையும் தரிசனத்தையும் கொடுப்பதற்கு பல பிரச்சனைகளும், உலகின் சிற்றின்பங்களும், போலியான உலக சிநேகங்களும் வரலாம்.இடம் கொடுத்து விடாதீர்கள். எச்சரிக்கையாயிருங்கள்! அனுதினமும் திட்டமிட்ட வேத வாசிப்பும், ஒழுக்கமுள்ள ஜெப வாழ்வுமே உங்களை உன்னதமானவரின் மறைவில் வைத்து பாது காக்கும். தேவ பிள்ளையே உஷார் ●

## உன்னத ஆசீர்வாதம்

ஆசீர்வாதம் என்றாலே நம் அனைவரும் முதலில் நினைவிற்கு வருவது நல்ல வேலை, தொழில் செழிப்பு, வேலை உயர்வு, சொந்த வீடு, பெயர், புகழ் மற்றும் செல்வங்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இது மாத்திரம் ஆசீர்வாதம் அல்ல. இது அநித்தியமானவைகள். தேவன் நம்மை உன்னத ஆசீர்வாதங்களால் நிரப்ப விரும்புகிறார். உங்களை ஆசீர்வதிப்பது மாத்திரமல்ல, உங்களை அநேகருக்கு ஆசீர்வாதமாக வைப்பதே தேவனுடைய திட்டம். உன்னத ஆசீர்வாதம் என்றால் என்ன? ஆபிரகாம் என்கிற மனிதனை தேவன் தெரிந்து கொண்டு அந்த ஒரு மனிதன் மூலமாக உலகத்தையே ஆசீர்வதிக்க தேவன் சித்தம் கொண்டார் (ஆதி. 12:1-3). ஆபிரகாம் என்கிற ஒரு மனிதனின் கீழ்ப்படிதல் மூலம் இஸ்ரவேல் என்ற தேசம் உருவானது, அந்த இஸ்ரவேலில் தாவீதின் வம்சத்தில் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார், இயேசு கிறிஸ்துவின் மூலம் முழு மனித குலத்திற்கு இரட்சிப்பு வந்தது. இரட்சிக்கப்பட்ட நாமும்கூட இந்நாள் வரைக்கும் ஆபிரகாமின் சந்ததி என்றே அழைக்கப்படுகிறோம். இது தான் உன்னத ஆசீர்வாதம்.



**"...வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக" (ஆதி. 14:19).**

**வாலிபர்களே, தேவன் உங்களையும் உன்னத ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்க விரும்புகிறார். உங்களைக் கொண்டு அநேகருக்கு இரட்சிப்பு என்கிற ஆசீர்வாதத்தை தர விரும்புகிறார். உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவருக்கு கீழ்ப்படியும்போது எல்லாவித ஆசீர்வாதங்களாலும் நிரப்பி ஆசீர்வதிப்பார்.**

## உன்னத பாதுகாப்பு



இப்பொழுது இருக்கும் சூழலில், உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் பேராபத்துக்கள் நிறைந்துள்ளது. கொரோனா கொள்ளை நோய் பிரதான அச்சுறுத்தலாக இருந்தாலும், இன்னும் அநேக ஆபத்துக்கள் புவி வெப்பமயமாகுதல், இயற்கை அழிவுகள் என்று எங்கு பார்த்தாலும் ஆபத்துக்கள் நம்மை சூழந்து இருக்கின்றன. இந்த ஆபத்திலிருந்து எப்படி தப்பித்து கொள்வது? யார் நமக்கு பாதுகாப்பு? இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது, அவர்களை விடுவிக்க தேவன் வாதைகளையும், கொள்ளை நோய்களையும் எகிப்து தேசத்தின்மீது அனுப்பினார். அதினால் அந்த தேசமே நிலைகுலைந்து போனது. ஆனால் அதே தேசத்தில் கோசேஷன் என்ற பகுதியில் வசித்த இஸ்ரவேல் ஜனங்களை அந்த வாதையோ, கொள்ளை நோயோ அவர் எல்லைகளுக்குள் வரவில்லை. அது தான் உன்னத அடைக்கலம். இந்த உலகத்தில் எத்தனை ஆபத்துக்கள், அழிவுகள் வந்தாலும், நாம் உன்னதமானவருடைய மறைவில் இருக்கும் போது ஒன்றும் நம்மை சேதப்படுத்த முடியாது. இன்றைக்கு அவருடைய செட்டைகளின் மறைவில் வந்து விடுங்கள். உலகத்தின் ஆசையை பின்தொடர்ந்து, அந்தப் பாதுகாப்பை இழந்து விடுவோம்.

**வாலிபர்களே! தேவனுடைய உன்னத மறைவில் தான் இருக்கிறீர்களா என்று சோதித்துப் பார்த்து, அவரிடம் சேருங்கள் உன்னத**

## உன்னத பெலன்

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலிருந்து பரலோகத்திற்கு எடுத்து கொள்ளப்படும் முன் சீஷர்களுக்கு கொடுத்த கட்டளை என்னவென்றால் ''நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' என்றார். உன்னத பெலன் என்றால் என்ன? எப்படி பெற்று கொள்வது. அப்.1:8ல், பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து என்று எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை உன்னத பெலத்தினால் நிரப்புகிறார். சீஷர்களையும் அப்படியே நிரப்பினார், அதினால் உலகம் முழுவதும் இயேசுவின் நற்செய்தியை அறிவித்து, அற்புத அடையாளங்களை செய்து அநேக ஆத்துமாக்களை அறுவடை செய்தார்கள். இந்தக் கடைசி கால எழுப்புதலை எதிர்நோக்கி கொண்டிருக்கும் நம்மையும்கூட உன்னத பெலத்தினால் நிரப்பி பலத்த சாட்சிகளாய் நிலைநிறுத்த விரும்புகிறார். நீங்கள் ஆயத்தமா?



**வாலிபர்களே! ஆவிக்குரிய வாழ்க்கையில் சோர்ந்து போய், எழும்ப முடியாமல் இருக்கிறீர்களா? அவருடைய பாதத்தில் காத்திருங்கள் உன்னத பெலத்தால் நிரப்புவார்.**

## உன்னத இடம்

இந்த உலகில் நமக்கு நிலையான இடமோ, பதவியோ மற்றவர்கள் மதிக்கதக்க அந்தஸ்தோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் வானத்தையும், பூமியையும் படைத்த உன்னதமான தேவன், தான் இருக்கும் பரலோகத்தில் நமக்கு ஒரு உன்னத இடத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அந்த உன்னத இடம் என்றென்றைக்கும் நித்திய நித்திய காலமாக நிலைத்திருக்கும், அதற்கு முடிவேயில்லை. ஐசுவரியவானாகிய வாலிபன் இயேசுவிடம் வந்து நித்திய ஜீவனை அடைய நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு அவனிடம் உன்னிடத்திலுள்ள ஆஸ்திகளையெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடுத்து விட்டு என்னை பின்பற்றி வா என்றார். ஆனால் அவன் திரளான ஆஸ்தி உடையவனாய் இருந்ததினால் அதைவிட மனதில்லாமல் திரும்ப போய்விட்டான். இன்றைக்கு அநேகர் அழிந்து போகும் உலகத்தின் ஆசைக்காக நித்திய ஜீவனை இழந்து விடுகிறார்கள். ''பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'' (கொலோ. 3:2) என்று பவுல் எழுதுகிறார்.



**''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்'' (எபே. 2:7).**

**வாலிபர்களே! இயேசுவை பின்பற்ற முடியாமல் எது உங்களை தடுக்கிறது? இன்றைக்கு நீங்கள் மனந்திரும்புவீர்களானால் பரலோகத்தில் உன்னத இடத்தை சுதந்தரித்து கொள்வீர்கள்.**

# தொடர்ந்து ஓடு!

சாதனை: சுமா



எதிர்கால சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். இந்த உலகில் நம்மால் இதெல்வாம் சாதிக்க முடியாது. அதற்கான பெலன் என்னிடம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நிமிடங்களில் இந்த உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் சாதிக்க வேண்டுமென்ற துடிப்புள்ளவர்கள் சாதனைப் படைத்துக் கொண்டிருக்கின்றனர். சாதனை களைப் பற்றி பேசுவதினால் நாம் சாதனையாளராக மாற முடியாது. மாறாக, சாதனைகளை படைப்பதற்காக ஒவ்வொரு அடி எடுத்து வைத்து முன்னேற வேண்டும். அப்படி முன்னேற துடிக்கும் இளம் நெஞ்சங்களுக்கான ஒரு சாதனையாளரின் வாழ்க்கை இதோ உங்கள் முன்...

ஸ்ரீனிவாசனுக்கு சின்ன வயதில் இருந்தே இஞ்சினியராக வேண்டும் என்ற ஆசை மேலொங்கி இருந்தது. அதனால் பள்ளிப் படிப்பை வெகு ஆர்வத்துடன் படித்து அதிக மதிப் பெண்களுடன் படித்தார். ஆனால் அதிஷ்டவசமாக இஞ்சினியர் படிப்பைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. இந்த வருடம் தான் கிடைக்கவில்லை, அடுத்த வருடமாவது, தான் விரும்பிய இஞ்சினியர் படிப்பைத் தொடர முடிவு எடுத்தார். அடுத்த வருடமும் விரும்பிய படிப்பைத் தொடர முடியவில்லை. எனவே B.SC. Maths படிப்பை எடுத்து படிக்க முடிவு செய்தார். கல்லூரி படிப்பைத் தொடரும் போது என் பெற்றோரும் ஏழை, நானும் ஏழை. ஆனால் எனக்கு பின் வரும் என் குழந்தைகளும் ஏழையாகவே இருக்க வேண்டுமா? என்ற குழப்பம் நிறைந்த எண்ணம் அவரைப் பிடித்துக் கொண்டது. இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, நாம் ஏன் Jewellery Business பண்ணக் கூடாது. அநேகர் சாதிக்கும் போது நாம் ஏன் இந்த Business-ல் சாதிக்கக் கூடாது என்ற எண்ணம் தோன்றியது. எனவே கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு ஒரு நகைக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். இவருடைய பெற்றோர்கள் இவர் நகைக் கடையில் வேலைக்குச் செல்வதை விரும்பாமல் இவருடைய செயலை எதிர்த்தனர். இவர் யார் சொல்வதையும் கேட்காமல் அவருடைய குறிக்கோளில் உறுதியாக இருந்தார். எனவே நகைக் கடையில் வெறும் ரூ.150க்கு வேலைக்கு சேர்ந்தார்.

பத்து மாதம் நகைக் கடையில் வேலை செய்தார். அப்பொழுதே Manufacturing எப்படி செய்வது, Business எப்படி செய்வது என்ற எல்லா நுணுக்கத்தையும் கற்றுக் கொண்டார். நாம் ஏன் Business செய்யக் கூடாது என்று நினைக்கும் போது ஒருநாள் ஒரு வழிப்பேக்கர் கடை வீதியில் Address கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அந்த வழிப்போக்கருக்கு ஹிந்தி மற்றும் பஞ்சாபி மொழிகள் மட்டுமே தெரிந்ததால் அவருக்கு யாரும் உதவவில்லை. இதைப் பார்த்த ஸ்ரீனிவாசன் உதவ முன் வந்தார். பள்ளி படிக்கும்போதே இவர் ஹிந்தி கற்றிருந்ததால் எளிதாக அந்த வழிப்போக்கருக்கு உதவிச் செய்தார். பிறகு இருவரும் பேசும் போது வழிப்போக்கர் ஸ்ரீனிவாசனைப் பார்த்து நீ என்ன வேலைப் பார்க்கிறாய் என்று கேட்க, அதற்கு ஸ்ரீனிவாசன் நான் நகை கடையில் வேலைப் பார்க்கின்றேன். Jewellery Manufacturing பண்ண வேண்டும் என்ற ஆசை இருக்கிறது என்று கூற, உடனே அந்த வழிப்போக்கர் எனக்கு சொந்தமான மூன்று நகைக் கடைகள் இருக்கின்றது. நீ அங்கே வந்து வேலை செய்கிறாயா? என்று கேட்டதும் ஸ்ரீனிவாசனும் ஒப்புக் கொண்டார். அந்த வழிப்போக்கரின் கடைகள் அகமதாபாத்தில் இருந்தது.

ஸ்ரீனிவாசனுக்கு அங்கே செல்ல ஆசை. ஆனால் அவரிடம் பணம் இல்லை. பெற்றோரும் அவர் அகமதாபாத் செல்ல ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால் ஸ்ரீனிவாசன் விடாப்பிடியாக இருந்ததால் இவரின் தாயார் ரூ.10,000 கொடுத்து வழியனுப்பி வைத்தார். இவரும் தன்னுடைய நண்பர்களிடம் இருந்து கொஞ்சத் தொகையை கடனாக பெற்றுக் கொண்டு அகமதாபாத் செல்ல தயாரானார். ஆனால் அந்த கடைக்குச் செல்வதற்கு முன் Sample எடுத்துக் கொண்டு போக வேண்டும். எனவே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். யாரும் செய்யாத முறையில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு Purify மற்றும் Design–ல் முழு கவனம் செலுத்தினார். வெற்றிகரமாக ஒரு Sampleயை தயார் செய்துக் கொண்டு அகமதாபாத் விரைந்தார். அங்கே நகை கடையில் உள்ளோர் இவர் செய்த Sampleயை பார்த்து ஆச்சரியப்பட்டனர். எனவே Orders அதிகமாக ஸ்ரீனிவாசனிடம் கொடுக்க ஆரம்பித்தனர். ஆனால் ஸ்ரீனிவாசன் இது மட்டும் போதாது என்று எண்ணினார்.

Handmade Jewelயை மிஷின் மூலம் ஏன் செய்யக் கூடாது என்று எண்ணி வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று அதின் தொழிற்நுட்பத்தைக் கற்றுக் கொண்டு அதை நடைமுறைப்படுத்த தொடங்கினார். ஆனால் இவர் வெற்றிக் காணவில்லை தோல்வியே கண்டார். தோல்வி அடைந்து விட்டோமே என்று எண்ணாமல் நகைகளைச் செய்ய புது புது Technologyயை அறிமுகம் செய்து வெற்றிக் கண்டார்.

அன்று ஒரு நபருடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 5000 தொழிலாளர்களுடன் வெற்றிகரமாக தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது Emerald Jewel Industry.






உங்கள் வெற்றிக்கான காரணம் என்னவென்றுக் கேட்டால் எதையும் முடியும் என்று நம்பினால் முடித்துக் காட்டலாம், மற்றும் சாதனையாளராக பொய் சொல்லக்கூடாது, செய்த தவறை திருத்திக் கொள்ள வேண்டும், ஒரு செயலை செய்ய ஆரம்பித்தால் அவற்றை ஆசையோடு செய்ய வேண்டும் என்பன போன்ற சில வரைமுறைகளை வைத்திருக்கிறார். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செய்தார். சாதனையாளராக மாறியுள்ளார் Emerald Jewel Industry Founder K.ஸ்ரீனிவாசன் அவர்கள் Jewel One என்ற நகை கடைகளையும் வெற்றிகரமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

***இதை வாசிக்கும் இளம் வாலிபர்களே! எதையும் சாதிக்க வல்லவர்கள் நாங்கள் என்று மன உறுதியுடன செயல்படுங்கள் அடுத்த சாதனை பக்கத்தில் உங்கள் பெயரும் இடம்பெறும்●***



தகவல்: ஜீலியட் கிளாரிலின்




# சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்!

**கடந்த மாதங்களில், நாம் நற்செய்தியை அறிவிக்கும் பொழுது பலர் நம்மிடத்தில் கேள்விகளைக் கேட்டு நடைமுறை சிக்கல்களை உண்டாக்குவர். இப்படிப்பட்ட சிக்கலானக் கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்து சுசேஷ ஊழியம் செய்வது எப்படி என்பதனைத் தொடர்ந்து இம்மாதத்திலும் நாம் காண உள்ளோம்.**

### தேவன் ஏன் தீமையை அனுமதிக்கிறார்?

ஆத்தும ஆதாயம் செய்யப்போகும்போது தங்கள் பார்வைக்கு ஞானிகளாயிருக்கிற சிலர் நமக்கு எதிர்படுவார்கள். அவர்கள் கேட்கிற கேள்வி என்னவென்றால், **'தேவன் நல்லவரானால் ஏன் தீமையை அனுமதிக்கிறார்?'** முதலாளி, தொழிலாளி என்ற வித்தியாசம் ஏன் இருக்கிறது? உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற பிரிவுகள் ஏன் காணப்படுகிறது? என்று கேட்பார்கள். இதற்கு நாம் பொறுமையுடன் அவர்களுக்கு விளக்கமளிக்கவேண்டும்.

### இதற்கு வேதம் கூறும் பதில் என்ன?

**''தேவன்படைத்ததெல்லாம்நல்லதாயிருக்கிறது...'' (1 தீமோ. 4:4).** தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது அவனை முதலாளியாகத்தான் படைத்தார்; பணக் காரனாகத்தான் படைத்தார்; சிறந்த பண்புகளுடன் தான் படைத்தார். ஆனால் மனிதனுடைய தவறான தெரிந்துக்கொள்ளுதலினால்தாழ்ந்தவனாக மாறிப் போனான். தெரிந்துக் கொள்ளும் பொறுப்பை தேவன் மனிதனுக்குள் வைத்திருக்கிறார். **''நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத் தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொள்வாயாக'' (உபா. 30:19).** எனவே, இன்று நீங்கள் ஜீவனாகிய இயேசுவைத் தெரிந்துக் கொள்ளலாமே, ஆசீர்வாதமாகிய கர்த்தரை ஏற்றுக் கொள்ளலாமே என்று எடுத்துக் கூறுங்கள். நீங்கள் எதை தெரிந்துக் கொள்ளுகிறீர்களோ அதைப் பெற்றுக் கொள்வீர்கள் என்பதை விளக்குங்கள்.

### நான் சன்மார்க்கன், மனந்திரும்பவேண்டிய அவசியமில்லை.

சன்மார்க்கரான ஜனங்கள் பொய் சொல்ல மாட்டார்கள், களவு செய்யமாட்டார்கள், கோவிலுக்கு செல்வார்கள், விரதம் இருப்பார்கள், தர்மங்கள் செய்வார்கள். எனவே, எனக்கு இயேசு தேவையில்லை; எங்கள் ஊரின் ஒதுக்குப் புறத்தில் பாவிகள் அநேகர் உண்டு அவர்களுக்குப் போய் சொல்லுங்கள் என்பார்கள்.

### இவர்களுக்கு வேதம் கூறும் பதில் என்ன?

**''அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை'' (ரோமர் 3:10).** நல்லவன் ஒருவனுமில்லை, நீதிமான் ஒருவனும் இல்லை. எல்லாரும் வழிதப்பி ஏகமாய் கெட்டுப் போனோம் (ரோமர் 3:12) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. அதற்கு மேலாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாளில் என்ன சம்பவிக்கும் என்றால், இந்த உலகத்தில் வாழும் வாழ்க்கை தான், மரணத்திற்கு பின்பு வாழும் வாழ்க்கை தீர்மானிக்கும். இங்கே பாவியாய் வாழ்ந்தால் பரலோகம் செல்ல முடியாது. பாவம் மன்னிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டால் தான் விடுதலை உண்டு. தொடர்ந்து பரிசுத்தமாய் வாழ தேவ பெலன் தேவை, எனவே அவரைச் சார்ந்து வாழ்வது அதிக முக்கியம். **''சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயத்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார்...'' (பிரசங்கி3:17)** என்றுவேதம் கூறுகிறபடியால் சன்மார்க்கனும் மனந்திரும்ப வேண்டும், ஞானஸ்நானம் எடுக்க வேண்டும், பரிசுத்தமாய் வாழவேண்டும். அப்பொழுதுதான் நியாயத்தீர்ப்புக்குத் தப்பி நித்திய பரலோகத்தில் சேர்க்கப்படமுடியும் என்று கூறுங்கள்.

**இனி அடுத்த மாதத்தில் மேலும் இரண்டு நடைமுறை சிக்கல்கள் உண்டுபண்ணும் கேள்விகளையும் அதற்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள விடைகளையும் நாம் தொடர்ந்து பார்ப்போம், சவால்களை சாதனைகளாக மாற்றி சுவிசேஷத்தை பட்டணந்தோறும் அறிவித்து ஆத்துமாக்களை இயேசுவண்டை சேர்ப்போம் ●**



டிப்ஸ்: ஆலன்

# இனிமையான எதிரி சர்க்கரை

நாம் உண்ணும் பழங்கள், தானியங்கள், போன்ற உணவில் பலவிதமான சர்க்கரை உள்ளது. ஆனால் நாம் பார்க்கவிருக்கும் இனிமையான எதிரி உணவிலும், பானங்களிலும் சேர்க்கப்படும் சர்க்கரை மற்றும் ஆரோக்கியமற்ற மாவு சத்துகளாகும்.

## இந்திய இளைஞர்கள் மத்தியில் நடத்திய ஆய்வுகளின் படி...

● இக்கால தலைமுறையினர் சராசரி அளவை விட மூன்று மடங்கு அதிகமான சர்க்கரை பயன்படுத்து கின்றனர்.

● 2018ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 12 முதல் 19 வயது வரை உள்ளவர்களில் நான்கில் ஒருவர் (1 out of 4) உடல் பருமனுடன் காணப்படுகிறார்கள்.

## ஏன் இந்த சர்க்கரை ஒரு இனிமையான எதிரி?

●நீங்கள் ஒரு மிட்டாய் தின்றதும் அதிலுள்ள சர்க்கரை உடனடியாக குளுக்கோஸாக ரத்தத்தில் கலக்கிறது. எனவே உங்கள் ரத்தத்திலுள்ள குளுக்கோசை செல்களுக்கு அனுப்பி சக்தியை தர அல்லது கொழுப்பாக சேமித்து வைக்க உங்களது கணையம் (pancreas) இன்சுலின் என்னும் ஹார்மோனை சுரக்கிறது. இது இரத்த சர்க்கரை அளவை உடனே ஏற்றி இறக்குகிறது.

●ஆகவே இனிப்பினால் கிடைத்த புத்துணர்ச்சி குறுகிய நேரத்தில் சோர்வாக மாறி, மீண்டும் பசியைத் தூண்டுகிறது. ஒரு சிறிய மிட்டாய் எப்படி மோசமான உணவு பழக்கத்திற்கு காரணமாகிறது பார்த்தீர்களா?

● இனிப்புகள் பிடிக்காது என்று சொல்லுபவர்களா நீங்கள்? சமோசா, வடை, சிப்ஸ், மற்றும் Fastfood என்று அடித்து நொறுக்குபவர்களாக இருக்கலாம். இது போன்ற உணவுகளும் ரத்தத்தின் சர்க்கரை அளவை ஏற்றி இறக்குவதில் சளைத்தது அல்ல.

●அதிக சர்க்கரை மற்றும் நொறுக்கு தீனிகள் உங்கள் உடலை பருமனாக்கி, பல்வேறு வேண்டாத ஹார்மோன் மாற்றங்களை ஏற்படச் செய்கிறது.

●உடல் பருமன் பிற்காலத்தில் இருதய நோய், நீரிழிவு (type 2 diabetes) மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கு ஆதாரமாகிறது.

## இனிமையான எதிரியை வசப்படுத்துவது எப்படி?

**Artificial Sweeteners பயன்படுத்தலாமா?**

Saccharin, Aspartame, Sucralose போன்ற கலோரி குறைந்த இனிப்புகள் உங்களின் பழக்கத்தை மாற்றாது. அவைகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் இன்னும் சரியாக ஆராயப்படவில்லை.

தேன், நாட்டு சர்க்கரை, கருப்பட்டி... ஆஹா கேட்கவே ஆரோக்கியமாக இருக்கிறதல்லவா! பெரும்பாலும் (80-99%) சர்க்கரை தான் இருக்கிறது.

## ஆகவே உங்கள் நாவின் சுவை அரும்புகளை பழக்குவியுங்கள்!

●உணவிற்கு பின்பு Sweets சாப்பிடுபவராக இருந்தால் அதை முதல் வாரத்தில் தவிர்த்திடுங்கள்.

★இனிப்புகள், குளிர்பானங்கள், பழச்சாறுக்கு பதிலாக பழங்களை உண்ணுங்கள்.

●புரதம் அதிகம் நிறைந்த மீன், முட்டை, இறைச்சி, பயிறு, பருப்புகள், நார் சத்து நிறைந்த காய்கறிகள், கீரை வகைகள் சாப்பிட்டால், நீண்ட நேரம் இனிப்புகள் இல்லாமல் செயல்பட முடியும், ஆரோக்கியமானதும் கூட.

● தினமும் 1 மணி நேரமாவது உடற்பயிற் செய்யுங்கள் ●

**இனிமையான வாழ்விற்கு!**
**ஆரோக்கியமானதை சாப்பிடுங்கள்!**

# ஜெபக்கையேடு

ஆகஸ்ட் 2021

ஜெபம்: எஸ்தர்

## போதைக்கு அடிமை

நாடு முழுவதும் கஞ்சா, குட்கா, மெத்தாம்பேட்டமைன் போன்ற போதைப்பொருட்கள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 3 கோடிக்கும் அதிகமாக இருப்பதாக போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பெரும்பாலானோர் போதைக்கு அடிமையாகி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

போதைப் பொருட்கள் அதிகரிப்பால் நாட்டில் நடக்கக்கூடிய கொலை, கொள்ளை, வழிப்பறிப் போன்ற குற்றச் சம்பவங்களும் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

குற்றச்சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் பலரும் சிறுவர்கள்.

கடந்த வருடம் சென்னையில் நடந்த 147 கொலை வழக்குகளில் 60 விழுக்காடுக்கு அதிகமான கொலைகள் போதையில் நடந்திருப்பதாகவும், 246 செயின் பறிப்பு சம்பவங்களில் 150 சம்பவங்கள் போதைப்பொருள் வாங்க பணமில்லாத காரணத்தினால் நடந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.




### ஜெபக்குறிப்புகள்:

1. போதைக்கு அடிமைப்பட்டிருக்கும் 3 கோடிக்கும் அதிகமான பேர் இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

2. போதைக்கு அடிமைப்பட்டிருக்கும் பள்ளிக் கல்லூரி மாணவர்கள் இப்பழக்கத்தை விட்டு மனந்திரும்ப ஜெபிப்போம்.

3. இதனால் ஏற்படும் குற்றங்கள் தடுக்கப்படவும், மாணவர்கள் அனைவரும் நல்வழிப் பாதையை தேர்ந்தெடுக்கவும் ஜெபிப்போம்.

4. போதைக்கு அடிமையாவதால் சிறுவயதில் பல வியாதிகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வருக்கும் நல்ல சுகம் உண்டாகவும், உயிரிழப்புகள் ஏற்படாதபடி தடுக்கப் படவும் ஜெபிப்போம்.

5. போதைப்பழக்கத்தில் இருப்போர் மன அழுத் தத்திற்குள் இருப்போர் அதிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## I.T. ஊழியர்கள் வேலை இழப்பு




இந்திய ஐ.டி. துறையில் சுமார் 1.6 கோடி ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இதில் 90 லட்சம் பேர் குறைந்த திறன் சேவை பிரிவுகளிலும், பிபிஓ பிரிவுகளிலும் பணியாற்றி வருகிறார்கள் என தகவல்கள் தெரிவிக்கிறது.

குறைந்த திறன் சேவை பிரிவு மற்றும் பிபிஓ பிரிவுகளில் ஆட்டோமேஷன் அதிகளவில் புகுத்தப்படும் காரணத்தால் 90 லட்சம் ஊழியர்களில் 30 லட்சம் ஊழியர்கள் தங்களது வேலை வாய்ப்பை இழக்க நேரிடும்.

30 லட்சம் ஊழியர்களை பணிநீக்கம் செய்யும்போது, 100 பில்லியன் டாலர் அளவிலான தொகையை சேமிக்க முடியும் எனவும் ஆய்வறிக்கை கூறுகிறது.

### ஜெபக்குறிப்புகள்

1. ஐ.டி. துறையில் பணிபுரியும் 1.6 கோடி ஊழியர்களின் வேலைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

2. 30 லட்சம் பேர் வேலை வாய்ப்பை இழக்காமல் தொடர்ந்து பணிகளை செய்வதற்கு வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

3. ஆட்டோமேஷன் சேவைகளை அதிகம் பயன் படுத்துவதால் இந்த வேலை இழப்புகள் ஏற்படாதவாறும், அவர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கப்படவும் ஜெபிப்போம்.

4. வேலை இழப்பால் 30 லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

5. இந்திய அரசாங்கம் இதில் தலையிட்டு சரியான முடிவு எடுத்து வேலை இழப்புகளை சரி செய்து தீர்வுகள் எடுக்கப்பட ஜெபிப்போம்.

## பாலியல் துன்புறுத்தல்

- பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறவர்களில் 7 வயதுகுட்பட்ட சிறுமிகள் அதிகமாக இருக்கிறார்கள். பாலியல் என்றால் என்னவென்று தெரியாத குழந்தைகளை துன்புறுத்துபவர்கள் பெரும்பாலும் வயதானவர்கள்.

- குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களும், தெரிந்த நபர்களாகவும் இருக்கிறார்கள்.

- 18 வயது நிரம்பாத சிறுமிகள் காதல் வலையில் அகப்பட்டு ஏமாற்றப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

## ஜெபக்குறிப்புகள்

1. பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு வரும் சிறுமிகள் அதிலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

2. பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் நபர்கள் தண்டிக்கப்பட அரசு சட்டம் கொண்டு வர ஜெபிப்போம்.

3. பெண் குழந்தைகளுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்க ஜெபிப்போம்.

4. காதல் என்னும் வலையில் சிக்கி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படும் சிறுமிகளுக்கு விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.

5. பாலியல்-காதல் குறித்ததான சரியான புரிதல்களை பள்ளிகளிலும், வீடுகளிலும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட ஜெபிப்போம்.



## திசைமாறும் இளைஞர்கள் இன்டர்நெட் டேட்டா

- கொரோனா ஊரடங்களினால் இந்தியாவில் இன்டர்நெட் பயன்பாடு 13% அதிகரித்துள்ளதாக தொலை தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- அளவுக்கு அதிகமான இன்டர்நெட் டேட்டாவால் இளைஞர்கள் திசைமாறுகின்றனர்.

- கைபேசியின் அபரிவிதமான அறிவியல் வளர்ச்சியால் இன்றைய இளைஞர் சமுதாயம் பல பிரச்சனைகளை சந்தித்து வருகின்றது.

- ஆபாசப் படம் பார்ப்போரின் எண்ணிக்கையும், அதற்காக செலவு செய்யும் டேட்டாவும் அதிகரித்துள்ளது. கல்லூரி மாணவர்கள் இப்பிரச்சனையால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

- தினமும் 4 முதல் 6 மணி நேரம் தவறானப் படங்களை கைபேசி மூலமாக பார்த்து நேரத்தை வீணடிக்கிறார்கள்.



## ஜெபக்குறிப்புகள்

1. இன்டர்நெட் டேட்டாவால் திசைமாறும் வாலிபர்களின் சிந்தனைகளை தேவ ஆளுகைக்கு ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

2. ஆபாசப் படம் பார்க்கும் வாலிபர்கள் இதிலிருந்து வெளிவரவும், அந்த வலைதளங்கள் முடக்கப்படவும் ஜெபிப்போம்.

3. ஆபாசப் படங்களை பார்த்து அதற்கு அடிமைப் பட்டிருக்கும் இளம் தலைமுறையினர் அதிலிருந்து மீட்கப்படவும், இயேசுவை அறிந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

4. ஆபாசப் படங்களை பார்ப்பதற்காக தங்கள் நேரத்தையும் பணத்தையும் வீணாக்காமல், படிப்பில் கவனம் செலுத்துபவர் களாக மாற ஜெபிப்போம்.

5. மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் வாலிபர்கள் சுகம் பெறவும், இதிலிருந்து வெளிவர வேண்டும் என்ற எண்ணத்தை தேவன் உண்டாக்கவும் ஜெபிப்போம்.

# Revival IGNITERS

Refresh | Revive | Recharge

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின்
ஆழமான இரகசியங்களை அறியவும், தாங்கள்
தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும்
ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது.
நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே!
உன்னை பெலப்படுத்திக் கொண்டு,
பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 1ST SUNDAY
(1st August)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road. 9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

## EVERY 2ND SATURDAY
(14th August)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY
(8th August)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 / 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 6 PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 / 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

## EVERY 3RD SUNDAY
(15th August)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2PM)**
**Kadaiyam (via), Keelamathapuram, (TirunelveliDist).**
**8300131000 | 9750955548**

**MUMBAI (5PM - 8PM)**
**Gethsamane Prayer Centre, Bethel, Plot 305/E, Mith Chowky Marve Road Malad**
**9004882470 | 9664050567**

**CHENNAI (3.30PM)**
**VGP Victory House, Mount Road.**
**9488475315**

**DINDIGUL (3PM - 5:30 PM)**
**CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.**
**9750955548 | 6383015262**

**THIRUVARUR (3:30 PM)**
**Gethsamane Prayer Center,1A/25B, Bypass Road (Opp Arasu Autos)**
**9976766322 | 7373374733**

**TIRUVANNAMALAI (3:30 PM)**
**A L C Lebanon compound, Near Vijaya Mall, Bye pass Road Corner.**
**9791444788 | 9865553420**

**RANIPET (3 - 6P.M.)**
**Gethsemane Prayer Centre,**
**MBT Road, Navalpur**
**9500283179 / 9442885315**

## EVERY 4TH SATURDAY
(28th August)

**PERAMBALUR (5PM - 8 PM)**
**Gethsamane Prayer Centre**
**M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.**
**9788788512**

## EVERY 4TH SUNDAY
(22nd August)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist.
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
**Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode. 9750722000**

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
**Gethsamane Prayer Center, HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur. 9442885315**




அலசல்: ரவி

# கிறிஸ்தவ வாலிபர்கள் எதிர்கொள்ளும் கேள்விகள்

**என் அன்புக்குரிய வாலிப தம்பி மற்றும் தங்கைகளுக்கு, கிறிஸ்தவ வாலிப பிள்ளைகள் எதிர்கொள்ளும் கேள்விகள் என்கிற தலைப்பில், கடந்த 2 மாதங்களாக நாம் ஒரு சில முக்கியமானக் கேள்விகளை ஆராய்ந்து வருகிறோம். இக்கட்டுரையிலும், அதே தலைப்பின் கீழ் வருகிறதான மற்றொரு கேள்வியின் பதிலை ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய நாம் முற்படுவோம். அந்தக் கேள்வி என்ன?**

**உலகில் இருக்கும் எல்லா மதங்களுக்கும், மதத்தினருக்கும் அவரவர்களுக்கான பரிசுத்த புத்தகம் (Holy Book) இருக்க, கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் வேதாகமம் (The Bible) மாத்திரமே தேவனுடைய வசனம் என்று கிறிஸ்தவர்கள் எப்படி சொல்லலாம்?**







ஆம் நண்பர்களே, உலகில் பின்பற்றப்படும் எந்த மதத்திற்கும், அதற்கான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுத்தப் புத்தகங்கள் காணப்படும். உதாரணமாக, பெரும்பாலான மக்கள் பின்பற்றும் இஸ்லாம் மதத்திற்கு குரான் (Quran) இருக்கிறது. இந்து மதத்திற்கு வேதங்களும், உபநிஷத்துகளும், பகவத் கீதையும் இருக்கிறது. பிற மதத்தினர் அனைவரும், தாங்கள் பின்பற்றும் பரிசுத்த புத்தகங்களே, தேவனுடைய சத்தியமான வெளிப்பாடு என்றும் உரிமைக் கோருகிறார்கள். ஆனால் ஒருவர் இப்படி உரிமைக் கோருவதால், அவர்களுடைய புத்தகம் சத்தியமாக இருக்க தேவையில்லை.

**ஆதாரங்களைப் பார்க்க வேண்டும்!** அந்த உரிமைக் கோரலை நிரூபிக்கத்தக்கதான போதிய ஆதாரங்களை அவர்களால் கொடுக்க முடிகிறதா என்று பார்க்க வேண்டும். அந்த ஆதாரங்கள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதா என்பதையும் ஆராய வேண்டும். அவ்வாறாக, எல்லா பரிசோதனைகளிலும் வெற்றிப் பெறும்போதே, ஒருவரின் பரிசுத்த புத்தகம் குறித்தான உரிமைக் கோரலை நாம் அங்கீகரிக்க முடியும்.

பொதுவாகவே, நம்முடைய வேதம் குறித்து, பலதரப்பட்ட தவறான கருத்துக்கள்/குற்றச்சாட்டுக்கள் கூறப்படுவதுண்டு. உதாரணமாக, மனிதர்கள் வேதத்தை எழுதியிருக்க, அது தேவனுடைய வசனம் என்று எப்படி சொல்ல முடியும். வேதம் ஒருவரால் எழுதப்படவில்லை. பலபேர், பல தலைமுறைகளாக எழுதினார்கள். அந்த எழுத்தாளர்கள் தங்கள் விருப்பப்படி நிகழ்வுகள் நடந்து பல ஆண்டுகள் அல்லது தலைமுறைகள் கடந்தே வேதம் எழுதப்பட்டது. வேத உரையில் பல

தவறுகளும், முரண்பாடுகளும் இருக்கிறது என்பது போன்ற பல கருத்துக்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் உலாவி வருகிறது. ஒருசிலர் வேதம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டது. ஆகவே அது நம்முடைய சமகால நடைமுறைக்கு ஒவ்வாது என்று கூறுவோரும் உண்டு. இப்படி சொல்லுகிறவர்கள், தங்கள் கருத்துக்களுக்கு ஆதரவாக ஒரு ஆதாரத்தையும் சமர்பிக்க மாட்டார்கள். வேதம் தான் தேவனுடைய வசனம் என்று உறுதிப்படுத்தும் பல ஆதாரங்களில் ஒருசிலவற்றை கீழே காணலாம்.




**முதலாவது, நாம் ஒரு அனுமானத்தில் உறுதியாக இருக்க வேண்டும்**. ஒருசிலர் சொல்வதுபோல வேதம் மனிதர்களால் எழுதப்பட்டது என்கிற கருத்து தவறானது. தேவன் மனிதர்கள் மூலமாக எழுதினார் என்பதே சரி. **"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது..." (2 தீமோ. 3:16)** என்றும் சொல்கிறது. நம்முடைய வேதம் ஒரு சராசரி புத்தகம் அல்ல.

முதல் சான்றாக, நம்முடைய வேதம் 66 புத்தகங்களைக் கொண்டது. அதில் 39 பழைய ஏற்பாட்டையும், 27 புதிய ஏற்பாட்டையும் சேர்ந்தது. இவைகள் ஏறத்தாழ 1500 ஆண்டுகளின் காலளவில், 40க்கும் மேலான நபர்களால் எழுதப்பட்டது. எழுதினவர்கள் அனைவரும் நூலாசிரியர்கள் அல்ல. அனைவரும் வாழ்க்கையின் பல பின்னணிகளிலிருந்து வந்தவர்கள். இத்தனை வேற்றுமைகள் இருந்தும், இந்தப் புத்தகங்கள் அனைத்தும் ஒரு செய்தியைத்தான் கூறுகின்றன. மனிதன் பாவம் செய்து விழுந்து போனான். தேவன் அவனை மீட்க செய்த காரியம் என்ன என்பதுதான் அச்செய்தி. என் தம்பி, தங்கைகளே! நாம் ஒரு செய்தியை மற்றொருவருக்கு ஒரு மூன்றாம் நபர் மூலமாக சொல்லும்போதே, பலமுறை அந்தச் செய்தி மாறிவிடுகிறது. ஆனால் இங்கே 40 நபர்கள், 1500 ஆண்டுகள் காலளவில் எழுதியிருந்தும்கூட வேதத்தின் செய்தி மாறவில்லை. இதுவே முதல் ஆதாரம்.

**இரண்டாவதாக, இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதல்** வேதத்தில், பழைய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, எங்கே பிறப்பார், எப்பொழுது பிறப்பார், எப்படி மரிப்பார் என்பவைக் குறித்ததான பல தீர்க்கதரிசனங்கள் சொல்லப் பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசனம் என்றால், நிகழ்வு சம்பவிப்பதற்கு முன்கூட்டி அந்த நிகழ்வை உரைப்பது. இப்படியாக, இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் ஒரு சிலவற்றை கீழே கொடுத்துள்ளேன். ஏசாயா 7:14, ஏசாயா 9:6,2, ஏசாயா 53; உபாகமம் 18:15; தானியேல் 9:24-27; மீகா 5:2 etc. இவ்வனைத்து தீர்க்கதரிசனங்களுமே, இயேசுவின் பிறப்பிற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக உரைக்கப்பட்டது.

**மூன்றாவதாக, வரலாற்று நிகழ்வின் முன்னறிவிப்பு**. தானியேல் 8ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியத்தோடு வரலாற்றை ஒப்பிடுவோமானால், தானியேல் கண்ட அவன் சொப்பனத்தோடே வரலாறு மிகவும் ஒத்துப்போகும். கல்தேயரின் ஆளுகை (Babylonian rule) தொடர்ந்து மேதியரும், பெரிசியரும் (Medo-Persia) ஆண்டார்கள். அவ்விரண்டு ராஜ்ஜியங்களில் பெர்சிய ராஜ்ஜியம் பெலன் கொண்டது. அதைத் தொடர்ந்து கிரேக்க ராஜ்ஜியம் (Kingdom of Greece) ஆண்டது. பின்பு கிரேக்க ராஜ்ஜியம் நான்காகப் பிரிந்தது. அது பின்பு இரண்டாக மாறியது. பின்பு ஒன்றாகி ரோம சாம்ராஜ்ஜியமாக (Kingdom of Rome) மாறியது. இவ்வாட்சி மாற்றங்கள் நிகழ்வதற்கு பலநூறு ஆண்டுகள் முன்பாகவே தானியேல் அதை சொப்பனத்தில் கண்டார்.

**இதுபோல, பல பல ஆவண ஆதாரங்கள் உப்புக்கடல் சுருள்கள் என பல ஆதாரங்களின் அடிப்படையில் வேதம்தான் தேவனுடைய சத்தியமான வசனம் என்று உறுதிபட நம்மால் சொல்ல முடியும்** ●

எச்சரிப்பின் செய்தி: சதீஷ்

# யூதர்கள் மீண்டும் இஸ்ரேலுக்குத் திரும்புதல்!




## இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

இயேசுவின் வருகைக்கு இந்த உலகம் எப்படி ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது? அவர் சொன்ன அடையாளங்களும், வேதத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களும் எவ்வளவு துல்லியமாய் நம்மை சுற்றி நிறைவேறிக் கொண்டு இருக்கிறது என்பதை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறோம். இந்த மாதத்தில் அவர் வருகைக்கு முன்பு நடந்து கொண்டிருக்கும் இன்னொரு அடையாளத்தைக் குறித்துப் பார்க்கலாம்.

ஆபிரகாம் மூலமாக வாக்குத்தத்த தேசத்தைப் பெற்ற இஸ்ரவேல் ஜனங்கள் அந்த தேசத்தை விட்டு சிதறடிக்கப்பட்ட பின்பு மோசே, எஸ்றா, செருபாபேல், நெகேமியா போன்ற தேவ மனிதர்களால் அடிமையாகக் கொண்டு போகப்பட்ட யூதர்கள் மீண்டும் தன் சொந்த தேசத்துக்கு திரும்பினார்கள்.


THE PALESTINE POST
STATE OF ISRAEL IS BORN
JEWS TAKE OVER SECURITY ZONES
U.S. RECOGNIZES JEWISH STATE

ஏறக்குறைய 1900 வருடம் யூதர்கள் தங்கள் சொந்த தேசத்தை விட்டு அந்நிய தேசங்களில் வாழ்ந்து வந்தனர். இஸ்ரேல் என்ற தேசமே காணாமல் போனது. உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டு வாழ்ந்து வந்த யூத மக்கள் கி.பி. 1882ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் தேசத்திற்கு திரும்ப தொடங்கினர். யாருமே எதிர்பார்க்காத வகையில் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற தேசம் மீண்டும் உருவானது. தேசத்தின் சுதந்திரத்திற்குப் பின் முதல் மூன்று ஆண்டுகளில் யூதர்களின் ஜனத்தொகை இரட்டிப்பானது. 100 நாடுகளுக்கும் மேலான தேசங்களிலிருந்து வந்த மக்கள் ஒற்றுமையாக வாழ்வது பிரமிக்க முடியாத ஒன்றாகும். 8 லட்சம் பேருடன் மீண்டும் உருவான இந்த தேசம் இன்று ஏறக்குறைய 93 லட்சத்திற்கும் அதிகமான யூத மக்கள் வாழும் தேசமாக இஸ்ரேல் உருவாகியுள்ளது.



**''நான் உங்களைப் புறஜாதிகளிடத் திலிருந்து அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன்'' (எசே. 36:24)** என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தை நிறைவேறிக் கொண்டு வருகிறது. இயேசுவின் முதலாம் வருகைக்குப் பிறகு சிதைக்கப்பட்ட இஸ்ரேல் நாடு, அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னால் மீண்டும் உருவாக வேண்டும் என்ற தீர்க்கதரிசனத்தின்படி யூதர்கள் மற்றும் அவர்களின் தேசம் அற்புதமாய்த் தோன்றி இருப்பதை நம் சொந்தக்கண்களால் பார்த்து கொண்டு இருக்கிறோம். உலகளவில் 14.7 மில்லியன் யூத மக்கள் வசித்து வருகின்றனர்.



இதில் 47% பேர் இஸ்ரேல் தேசத்திற்கு குடி பெயர்ந்து விட்டனர் என்று புள்ளி விவரங்கள் சொல்கிறது. எது எப்படியோ இஸ்ரேல் தனி நாடாக உருவாக்கப்பட்ட ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் அவர்களின் குடிபெயர்ப்பு அதிகரித்து கொண்டேதான் இருக்கிறது. கடந்த 2020ஆம் ஆண்டு மட்டும் ஏறக்குறைய 20,000 யூதர்கள் ரஷ்யா, உக்ரைன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா தேசத்திலிருந்து இஸ்ரேல் தேசத்திற்கு புலம் பெயர்ந்து உள்ளனர். "**...கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, நான் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, சுற்றிலுமிருந்து அவர்களைச் சேர்த்து, அவர்களை அவர்கள் சுயதேசத்திலே வரப்பண்ணி, அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்...**" **(எசே. 37:21,22)** என்ற கர்த்தருடைய வார்த்தையின் படி யூத மக்கள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் தன் சொந்த தேசத்தை நோக்கி தங்கள் பயணத்தை ஆரம்பித்து உள்ளனர்.

**எனக்கன்பான**
**வாலிப தம்பி, தங்கச்சி!**
**யூதர்கள் மீண்டும் இஸ்ரேலுக்குத் திரும்புதல் இயேசுவின் வருகைக்கும் உலகத்தின் முடிவுக்குமான அடையாளங்களில் முக்கியமான ஒன்றாகும். நம்முடைய வேதாகமத்தில் சொல்லிருக்கிறபடி இயேசுவின் வருகைக்கு முன்பாக இந்தப் பூமியிலே எவை எல்லாம் சம்பவிக்கும் என்று இயேசு சொன்னாரோ, அந்த அடையாளங்கள் எல்லாம் மிக துல்லியமாக நம் கண்கள் முன்பாக நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. "அவர் வருகிறார், அவர் (இயேசு) பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்" (சங்கீதம் 96:13). நீங்கள் நியாயாதிபதியாகிய இயேசுவை சந்திக்க எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள்.**

அவர் வருகைக்கு முன்பாக நடக்கும் இன்னொரு அடையாளத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.




வேத ஆய்வு: ரேச்சல்



# யோபு

## உபத்திரவத்தின் மூலமாய் ஆசீர்வாதம்

*அன்பான இளம் நெஞ்சங்களே! கடந்த மாதங்களில் ஐந்தாகமம் மற்றும் சரித்திர நூல்களைக் குறித்த பல சுவாரசியமான தகவல்களை பார்த்தோம். இந்த மாதம் கவிதை நூல்களில் முதலாவது நூலான "யோபு" புத்தகம் பற்றி சுருக்கமாக காணலாம்.*

**அறிமுகம்:** இப்புத்தகத்தில் பல அற்புதமான பாடங்கள் அடங்கியுள்ளன. யோபுவுக்கு வந்த கடும் சோதனைகள் அவற்றினின்று அவர் விடுதலை பெற்று, பெரிய உன்னதமான ஆசீர்வாதத்தை அடைந்ததை குறிப்பிடப் பட்டுள்ளது.

**எழுதப்பட்ட காலம்:** நியாயப்பிரமாண காலத்திற்கு முன்பே எழுதியிருக்கலாம். ஏனென்றால் மோசே எழுதிய நியாயபிர மாணத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**யோபில் கிறிஸ்து:** என் மீட்பர் உயிரோடிருக்கிறார் (யோபு 19:25-27) இதில் இரட்சகர் வெளிப்படுகிறார். யோபுவிற்கு வந்த கேள்விகள் நமக்கு வரக்கூடாது. காரணம் இயேசு (எபி. 4:15). நம்மை போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டபடியினால் அவரே நமக்கு முன்மாதிரி- அவரே நமது மீட்பர், நமது மத்தியஸ்தர்.

**ஆசிரியர்:** இது மிகப் பழமையான புத்தகம். ஆகையால் இப்புத்தகத்தின் ஆசிரியர் திட்டவட்டமாக தெரியவில்லை.

**அதிகாரம்:** 42

**வசனங்கள்:** 1,070

**வார்த்தைகள்:** 10,102

**முக்கிய நபர்கள்:** யோபு, எலிப்பாஸ், பில்தாத், சோப்பார், எலிகூ.

### யோபு புத்தகம் - சுருக்கம்

*யோபின் உபத்திரவங்கள்*

யோபுவின் சூழலும் குணாதிசயமும் (1:1-5 வச.)
யோபுவின் பிரச்சனைகள் (1:6-2:10 வச.)
யோபுவை தேற்றுபவர்கள் (2:11-13 வச.)

### பொய்யான வழியில் தேற்றும் மூன்று நண்பர்கள்

**முதல் கட்ட வாதம்**

யோபுவின் புலம்பல் (3:1-26 வச.)
எலிப்பாஸின் பதில் (4:1-5:27 வச.)
யோபுவின் பதில் (6:1-7:21 வச.)
பில்தாத்தின் பதில் (8:1-22 வச.)
யோபுவின் பதில் (9, 10 அதி.)
சோப்பாரின் பதில் (11 அதி.)
யோபுவின் பதில் (12-14 அதி.)

**இரண்டாம் கட்ட வாதம்**

எலிப்பாஸின் பதில் (15 அதி.)
யோபுவின் பதில் (16, 17 அதி.)
பில்தாத்தின் பதில் (18 அதி.)
யோபுவின் பதில் (19 அதி.)
சோப்பாரின் பதில் (20 அதி.)
யோபுவின் பதில் (21 அதி.)

**மூன்றாம் கட்ட வாதம்**

எலிப்பாஸின் பதில் (22 அதி.)
யோபுவின் பதில் (23, 24 அதி.)
பில்தாத்தின் பதில் (25 அதி.)
யோபுவின் பதில் (26-31 அதி.)

## எலிகூவின் வார்த்தைகள்

1. உபத்திரவத்தின் மூலம் கற்ற பாடம் (32, 33 அதி.)
2. தேவனுடைய நீதியும் விவேகமும் நிரூபிக்கப்படுதல் (34 அதி.)
3. எப்போதும் தூய்மையாயிருப்பதன் பயன் (35 அதி.)
4. தேவன் நேர்மையற்றவர் என்று குற்றம் சாட்டிய யோபுவின் பாவம் (36, 37 அதி.)


## எலிகூவின் வார்த்தைகள்

1. உபத்திரவத்தின் மூலம் கற்ற பாடம் (32, 33 அதி.)
2. தேவனுடைய நீதியும் விவேகமும் நிரூபிக்கப்படுதல் (34 அதி.)
3. எப்போதும் தூய்மையாயிருப்பதன் பயன் (35 அதி)
4. தேவன் நேர்மையற்றவர் என்று குற்றம் சாட்டிய யோபுவின் பாவம் (36, 37 அதி.)


## சுழல் காற்றிலிருந்து தேவனுடைய வெளிப்பாடு

முதல் வெளிப்பாடு: இயற்கையில் தேவனுடைய சர்வ வல்லமை பிரஸ்தாபப்படுதல் (38, 39 அதிகாரங்கள்)

யோபு தன் தவறை உணர்ந்து அறிக்கையிடல் (40 அதிகாரம் இரண்டாம் வெளிப்பாடு: யோபுவின் தாழ்மையான பதில் (40,41 அதிகாரங்கள்)

## யோபுவின் ஆசீர்வாதங்கள்

1. தேவன் யோபுவைத் தேற்றிய உண்மையற்ற நண்பர்களைக் கடிந்து கொள்கிறார் (42:1-9 வச.)
2. யோபு பழைய நிலையை அடைதல் (42:10-17 வச.)




நம் உடலுக்கென்று இருக்கும் தூக்க சுழற்சி சுற்றுப்புற சூழ்நிலையை வைத்தும் தீர்மானிக்கப்படும். வெளிச்சம் நிறைந்த சூழலில் சுறுசுறுப்பாகவும், இருளான நிலையில் ஓய்வெடுக்கவும் உடல் நினைக்கும். இரவில் தான் நல்ல தூக்கத்தை தரும் மெலட்டோனின் ஹார்மோன் உடலில் சுரக்கும். படுக்கையறையில் ஸ்மார்ட் போன் பயன்படுத்தும் போது *ஸ்மார்ட் போனிலிருந்து வெளியாகும் நீலநிற ஒளியால் உடல் குழப்பமடைந்து சுறுசுறுப்பாக இருக்க முயலும். மெலட்டோனின் ஹார்மோனும் சுரப்பதிலும் இடையூறு ஏற்பட்டு தூக்கம் வராது.* இதனால்தான் ஸ்மார்ட்போன் பயன்படுத் துபவர்கள் தூக்க மின்மையால் அவதிப்படுகிறார்கள். மேலும் ஸ்மார்ட் போனின் எல்இடி லைட் வெளிச்சம் கண்களில் உள்ள ரெட்டினாவை பாதிப்பதால் பார்வைக் குறைபாடும் நாளடைவில் ஏற்படும். இதனால்தான் விளக்குகள் அணைக்கப் பட்ட பிறகு இரவில் ஸ்மார்ட்போன் பயன்படுத்தக் கூடாது என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

# செய்திகள்!

## நேரடி வகுப்பு தொடங்காத நிலையில் தனியார் பள்ளிகள் 40 சதவீத கட்டணம் வசூலிக்க வேண்டும்



தனியார் பள்ளிகள் இந்த ஆண்டுக்கான கல்விக் கட்டணத்தை முதல் தவணையில் 40 சதவீதமும், இரண்டாம் தவணையில் 35 சதவீதம் என 75 சதவீத கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா 2வது அலை காரணமாக, மாணவர்ளுக்கு ஆன்லைன் மூலன் தான் பாடங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் தனியார் பள்ளிகள் தங்களுக்கான கல்விக் கட்டணத்தை முழுமையாக மாணவர்கள் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. கல்விக் கட்டணத்தை எவ்வளவு செலுத்த வேண்டும் என்பது தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் இதுவரை இல்லாததால் பெற்றோரும் கல்விக் கட்டணத்தை செலுத்த தயக்கம் காட்டி வந்தனர். அதற்காக பள்ளிக் கல்வித்துறை தற்போது கட்டணம் செலுத்தும் முறை குறித்து அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

பள்ளிக் கல்வி ஆணையர் நந்தகுமார் அனுப்பியுள்ள அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

கொரோனா தொற்று காரணமாக கடந்த 2021 ஏப்ரல் மாதம் முதல் பள்ளிகள் மீண்டும் மூடப்பட்டன. அதைத் தொடர்ந்து இந்தக் கல்வி ஆண்டுக்கான நேரடி வகுப்புகள் இன்னும் தொடங்கவில்லை. ஆனால் நடப்பு கல்வி ஆண்டில் பள்ளிகளில் கட்டணங்கள் வசூல் செய்யப்படுகின்றன என புகார்கள் வருகிறது. தற்போது நிலவும் கொரோனா பெருந்தொற்றை கருத்தில் கொண்டு தமிழகத்திலுள்ள தனியார் பள்ளிகளில் 75 சதவீதம் மட்டும் கல்வி கட்டணம் வசூல் செய்ய வேண்டும். முதல் தவணையில் 40 சதவீதம் கட்டணத்தை ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் வசூல் செய்யலாம். மீதமுள்ள 35 சதவீத கட்டணத்தை நேரடி வகுப்புகள் தொடங்கிய பிறகு 2 மாதங்களில் வசூல் செய்யலாம். மீதம் உள்ள 25 சதவீத கட்டணத்தை வசூல் செய்வது குறித்து கொரோனா பெருந்தொற்றின் நிலையை பொருத்து அறிவிக்கப்படும்.

- தினகரன் 08 ஜூலை 2021

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211






நண்பர்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை அனுசரிக்கப் படுகிறது. வேதத்தில் நிறைய நண்பர்கள் இருப்பதைப் பார்க்கிறோம் எப்படிப்பட்ட நண்பர்களாக இருந்தார்கள் என்பதையும், நாம் நட்பில் வளர என்ன செய்ய வேண்டு மென்பதை பார்க்கப் போகிறோம்.

## நண்பர் பிரச்சனையில் இருக்கும்போது...



தாவீதின் மகன் அப்சலோம் ஆட்சியைப் பறித்தபோது, நிறைய இஸ்ரவேலர்கள் அவன் பக்கம் சேர்ந்து கொண்டார்கள் ஆனால் ஊசாய் அவனோடு சேரவில் லலை. தாவீது தப்பித்து ஓடிய போது, ஊசாயும் அவரோடு போனார். சொந்த மகனும் நெருக்கமான சிலரும் தனக்கு துரோகம் செய்ததால், தாவீது மிகவும் மனம் உடைந்து போயிருந்தார். ஆனாலும் ஊசாய் தாவீதுக்கு உண் மையாக இருந்து, தாவீதுக்கு எதிரான சதித் திட்டத்தை முறியடிக்க தன்னுடைய உயிரையே பணயம் வைக்க தயாராக இருந்தார். தான் ஒரு அரண்மனை அதிகாரி என்பதாலும், வெறும் கடமை உணர்ச்சியாலும் அவர் அப்படி செய்யவில்லை. உண்மையான நண்பராக இருந்ததால் தான் அவர் அப்படி செய்தார். வேதம் இவரை தாவீதின் நண்பர் என்று சொல்கிறது (2 சாமு. 16:16; 1 நாளா. 27:33).

**பிரச்சனைகள் வரும் போதும் அவர்களோடு இருந்து உதவி செய்பவர்களே உண்மையான நண்பர்களாக இருக்க முடியும். ஊசாய் தன் நண்பனுக்காக உயிரையே கொடுக்கத் துணிந்தார். அதுபோல நீங்களும் உண்மையான நண்பர்களாக இருந்தால் நட்பு வளரும்.**

## நண்பர்கள் ஏமாற்றப்படும் போது...



இயேசு பூமியில் இருந்த கடைசி நாட்களில் அவருடைய உண்மையுள்ள அப்போஸ்தலர்களோடு அவர் நிறைய நேரம் செலவு செய்திருந்தார். அவர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள். அதனால் அவர்களைத் தன்னுடைய நண்பர்கள் என்று இயேசு சொன்னார் (யோவான் 15:15). ஆனால் இயேசு கைது செய்யப்பட்ட போது, அப்போஸ்தலர்கள் அவரை விட்டு ஓடிப்போனார்கள். தான் ஒருபோதும் இயேசுவை விட்டு ஓடிப்போவதில்லை என்று எல்லார் முன்பாக சொன்ன பேதுரு, அன்று ராத்திரியே இயேசுவை யாரென்று தெரியாது என்று சொல்லி விட்டார் (மத். 26:31-33, 56,69-75). உயிரோடு எழுந்த சில நாட்களுக்கு பிறகு அவர்கள் மீது வெறுப்போ, வருத்தமோ தனக்கு இருந்ததாக அவர் காட்டிக் கொள்ளவில்லை. இயேசுவை பொறுத்த வரைக்கும் அப்போஸ்தலர்கள் இன்னும் அவருடைய நண்பர்கள் தான். அவர் காட்டிய அன்பு அவர்களுடைய மனதில் நீங்காத இடம் பிடித்தது.

**உண்மையான நண்பர்களாக இருந்தால் எத்தனை ஏமாற்றங்கள் வந்தாலும் அவற்றை மன்னித்து நட்பில் வளருவார்கள். இயேசுவைப் போல எல்லோருடனும் நட்புடன் பழகுங்கள். இயேசுவைப் போல மன்னித்து மறக்கும்போது உண்மையான நட்பு வளரும்.**

ஆதாரம்: இன்டர்நெட்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-07-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.






# வாலிபர் எழுப்புதல் கருத்தரங்கு





வாலிபர்களுக்குள் எழுப்புதல் தரிசனத்தை அதிகரிக்க வேண்டுமென்ற தரிசனத்தோடு, ஜூன் மாதம் ஒவ்வொரு புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இக்கூடுகை நடத்தப்பட்டது. இதில் சகோ. சாம் ஜெபராஜ், சகோ. ஜான் வெஸ்லி, சகோ. சதீஷ் மற்றும் சகோ. அவினாஷ் அவர்கள் ஏழுவிதமான எழுப்புதல் தரிசனத்தின் அவசியத்தை குறித்து போதித்து ஜெபித்தனர். இதில் சராசரியாக ஒவ்வொரு நாளும் 450க்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்து, எழுப்புதலின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். அநேகர் எழுப்புதலுக்காக வைராக்கியமாக ஜெபிக்கவும் ஒப்புக்கொடுத்தோடு ஆத்துமாக்களை எழுப்புதலுக்காக ஆயத்தப்படுத்தவும் முன்வந்தார்கள். தேவனுக்கே மகிமை!







